
திலகர்

# மல்லியப்பு சந்தி



# நூல் தரவு


| | | |
|---|---|---|
| ஆசிரியர் | - | திலகர் |
| தலைப்பு | - | **மல்லியப்பு சந்தி** |
| முதற் பதிப்பு | - | செப்டெம்பர் 2007 |
| வெளியீடு | - | *பாக்கியா பதிப்பகம்* |
| பதிப்புரிமை | - | ஆசிரியருக்கு |
| பக்கம் | - | XV + 128 |
| புத்தகத்தின் அளவு | - | 8.5" X 5.5" |
| சர்வதேச நியம புத்தக எண் | – | 978 - 955 - 1805 - 00 - 5 |
| விலை | - | ரூபா. **200/=** |

| | | |
|---|---|---|
| Author | - | Thilagar |
| Ttitle | - | Malliyappoo Santhi<br>(A Collection of Poem) |
| First Edition | - | September 2007 |
| Publication | - | Bakya Publication |
| Copyright | - | Author |
| Pages | - | XV + 128 |
| Size of the Book | - | 8.5" X 5.5" |
| ISBN | - | 978 - 955 - 1805 - 00 - 5 |
| Price | - | **Rs.200/=** |

# நன்றிகள்


| | | |
|---|---|---|
| அறிமுகவுரை | - | விரிவுரையாளர் பொ.சிங்கரட்ணம் |
| பின்னுரை | - | பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி |
| ஆசியுரை | - | பிரம்மச்சாரி ரமண சைத்தன்யா |
| ஓவியம் | - | அட்டைப்படம் 'தவா' |
| | - | கவிதைகளுக்கானவை 'பெற்றீசியா' (திருமதி. திலகராஜா) |
| புத்தக ஆக்கம் | - | ஒளியச்சு - உஷா, தாமரை, மியுரின் வடிவமைப்பு - ரஜினி LPH |
| அச்சுப்பதிப்பு | - | சக்தி என்டர்பிரைசஸ் - கொழும்பு 13 |
| குரல்-(இறுவட்டு) | - | மாகிரட் ஜோஸப் (நிகழ்ச்சித் தொகுப்பாளர்) மலையக சேவை, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் |
| ஒலிப்பதிவும் கலவையும் | - | டிரோன் - Chorus Creations, Wattala |

என்னோடு இம்முயற்சிக்கு ஒத்துழைத்த சி. அ. யோதிலிங்கம் (அரசியல் ஆய்வாளர்), சிவகுரு, சண்முகராஜா, சேனாதி, ஸ்ரீ (தினகேசரி), சிவம்.பிரபா, மற்றும் நண்பர்கள் அனைவருக்கும்.

பொட்டு
சிறுக (வி) தை

மல்லியப்பு சந்தி

தீக்குச்சி

திரும்பிப்பார்

தொலைபேசி

தேசமே

அன்புள்ள அம்மாவுக்கு

உருமாறு

மீண்டும் குழந்தையாகிறேன்

என் அன்பின் ஆசானுக்கு...

ஒப்பந்தம்

ஆச்சி

அவள் பிரிவு

உயிர் வலி

இளைப்பாறுகிறாள்

கூடைப் புராணம்

அதே பழைய விடியல்

மேற்கில் உதிக்கும் சூரியன்கள்

செய்யும்

சோதிடம்

வரையப்படாத 'லைன்'கள்

மரியம்மாக்களுக்காக

தொழிலே...

எண்கணித கவி(ஞ)ன்

விழவு

நமது கதை

எயிட்ஸ்


விழாக்காலம்

வெள்ளித் தீயொன்று வேண்டும்

பட்டம் பறக்குது மரணத்தில் தொடங்கும் வாழ்வு

# சமர்ப்பணம்







மாதா

பிதா

குரு

# என்னுரை

கவிதைக்கு
பொய்
"அழகு" என்றால்
கவிதைக்கு
உண்மை
"உயிர்" என்கிறேன்
நான்.

என் ஒவ்வொரு
கவிதைக்குள்ளும்
கொஞ்சம்
உயிர் ஒட்டிக்கொண்டிருப்பதாகவே
உணர்கிறேன்.

கவிதையின்
யாப்பு இலக்கணம்
கற்றவனில்லை நான் - ஆனால்
கவிதைகள் நிறையவே
படிப்பவன் - அதனால்
படைப்பவன்.

கவிஞனானாலும்
மனிதனாகையால்
தவறுகள் இருக்கக்கூடிய வாய்ப்புகள்
தாராளமாக இருக்கலாம்
மன்னிக்க.
திருத்துக.

கற்றவர்கள்
முன்னிலையில்
மாணவனாக
மகிழ்ச்சியோடு காத்திருக்கிறேன்.

என்னுரையில்
என்னைப்பற்றிச் சொல்லவில்லை
ஏனெனில் என் படைப்புக்களின்
பாதியிலதுவும்
கலந்திருப்பதால்

இவ்வாறு சொல்ல விளைவது
இன்னொரு வயக்குழந்தை - தன்
அச்சத்தை தள்ளிவைத்து
அச்சகத்துக்கு சென்று - தன்
பதிவுகளை
பதிப்பாக்கும்
என்ற நம்பிக்கை
எனக்கு நிறையவே இருக்கிறது.

வாருங்கள்
வயத்துக் கவிஞர்களே
வயத்துடன்
கவிபடிப்போம்
கவிபடைப்போம்

திலகர்
*29.09.200*

# குருவிடமிருந்து

'இத்துணூன்டு பையனா இருந்த எங்க மயில் அண்ணன் மகன் என்னை பார்க்க எ(இ)லங்கையில இருந்து வந்திருக்கான். இந்தியாவுக்ககு வந்து இருபத்தைஞ்சு வருஷமாகப்போவுது எங்கள பார்க்க வந்திருக்கிற இரண்டாவது ஆளு இவன். இதுக்கு முன்ன எங்க மாமா ஒருக்கா வந்திருக்காரு. இப்போ எ(இ)றந்தும் போயிட்டாரு''.

என் அட்ரஸ் கூட தெரியாது. எப்படிடா வந்தனு கேட்டேன். 'சென்னையிலருந்து கொடைக்கானலுக்கு ஒரு விஷயமா போனேன். அப்படியே அங்கே இருந்து பழநிக்கு வந்து பல்லடம் வழியா திருப்பூருக்கு வந்தேன்.அங்கேயிருந்து மேட்டுப்பாளையம் வந்து ஊட்டி பஸ் எடுத்தேங்கிறான்'' இந்தியாவுல இருக்கிற, எனக்கே தெரியாத ஊரெல்லாம் சுத்துறான்'.

'நாங்க தோட்டத்த விட்டுட்டு வார நேரம் இவனுக்கு அஞ்சு இல்லாட்டி ஆறு வயசு இருக்கும். என்னை கண்டவுடன் பாதி காலு கழுவியும் கழுவாம பயந்து போய் வந்து நிற்பான். நான் ஒரு நைட் ஸ்கூல் வச்சிருந்தேன்.(இப்போ அந்த பழக்க வழக்கமெல்லாம் நம்ம தோட்டங்களுல இல்லாம போச்சுனு வேற சொல்றான். கேக்க கவலையா இருக்கு). நான் ஒன்னும் பெரிசா படிக்கலை. பூண்டுலோயா ஸ்கூலில் எஸ்.எஸ்.ஸி வரைக்கும் படிச்சேன். கவர்மண்ட் டெஸ்ட் அன்னைக்கு காலைல அப்பா தவறி போயிட்டாரு. அதுக்கப்புறம் பரீட்சையும் எழுதல. பள்ளிக்கூடத்துக்கும் போகலை. மூனு தங்கச்சி ஒரு தம்பி அம்மா இவங்களை கரையேத்துரத்துக்காக தோட்டத்துல பேர்பதிஞ் சுட்டேன்'.

‘அந்தி ஆறுமணியாகிட்டா தோட்டத்து சின்ன பிள்ளைங்கெல்லாம் என்கிட்ட படிக்க வந்திருவாங்க. எல்லா பிள்ளைகளோடையும் இவன் உட்காந்திருப்பான். ஏதாவது ஒரு புத்தகத்தை வச்சு கிழிச்சிகிட்டுடிருப்பான். அப்படியே எங்க அம்மா தங்ச்சிமாறோட வெளையாடிட்டு சாப்பிட்டுட்டு அங்கேயே தூங்கிருவான். அவன நான்தான் தூக்கிட்டுப்போய் அவங்க வீட்டுல தூங்கப் போடுவேன்’.

‘இன்னைக்கு நான் தூக்கிட்டுப்போன தோளுக்கு மேல வளர்ந்து என்னத் தேடிவந்து பார்த்துட்டு போக வந்திருக்கிறான். என்னா படிச்சிருக்கனு கேட்டேன். என்னென்னவோ சொல்றான். பட்டம் வாங்கியிருக்கிறானதும் சந்தோஷமாயிருக்குது. இவன் பெரிய ஆளா வருவானு அப்பவே தெரியும். ஒன்னாம் வகுப்பு படிக்கிற நேரமே மூனாம் வகுப்பு புத்தகத்தை வாசிச்சு முடிச்சிருவான். இவனை வச்சுதான் நான் மூனாம் வகுப்பு பிள்ளைக வாசிக்காட்டி மொட்டு போடச் (தலை குட்டு) சொல்லுவேன்’.

ஐயா, நான் கவிதை புத்தகம் ஒன்னு வெளியிடப்போறேன். அதுக்கு ஒரு செய்தி தாங்கனு கேட்டான். ‘அட நீ வேற. நான் வட்டகொடையவுட்டு வந்ததோட வாத்தியாரு வேலையெல்லாம் மறந்து போச்சு. பல்லவன் போக்குவரத்துல பஸ் டிரைவர் வேலை. இப்ப அதுவுமில்ல. அப்புறமெங்க பேனா புடிக்கிறது. இப்போ பேசிக்கிட்டிருக்கிறோமில்ல அதை அப்படியே எழுதி போடுனு சொல்லிட்டேன்’.

‘இவன் கவிதைய படிச்சா நம்ம தோட்டம் ஞாபகம் அப்படியே வருது. நம்ம பைத்தியக்காரப் பொட்டக்காவ கூட ஞாபகம் வச்சு எழுதியிருக்கிறான்’.

‘எழுது….. எழுது….நீயெல்லாம் நம்ம தோட்டங்களுக்கு ரொம்ப வேண்டிய ஆளுக. உன் மாதிரி இப்பவும் படிக்கிறாங்களா என்ன?’ (?).

‘இப்ப நீ படிச்சு தோட்டத்தில இருந்து வந்திட்டாலும் தோட்டத்தை மறக்காம இருக்கிற. தோட்டத்தை பத்தியே கவிதை எழுதுற. எனக்கும் பெருமையா இருக்குது. நம்ம தோட்டத்துக்கும் பெருமை கெடைக்கனும். நீ இன்னமும் நல்லா வரனும்’.

‘இப்போ என்னோட கூட்டாளி ஒருத்தரோட இவன பத்தியும் தோட்டத்தை பத்தியும் பேசிக்கிட்டிருக்கிறோம். என்னைய பத்தியும் இங்க வந்து என்னை அடையாளம் கண்டுபுடிச்சதை பத்தியும் ‘மீண்டும் குழந்யைாகிறேன்’ னு ஒரு கவிதை எழுதி காட்டினான். புத்தகத்துல இதையும் சேர்க்கப்போறதா சொல்றான். இவன் இன்னமும் நல்லா வரனும்.

மெய்யன் மேகராஜி
விஜய நகர்
குன்னூர், ஊட்டி
தமிழ்நாடு இந்தியா.

'திலக்' உடன் ஓரிரு நாட்களை என் நூல் பதிப்பீட்டு வேலைகளின் போது கழித்தேன். இடைவேளைகளில் 'திலகராஜா' எனும் முகாமையாளனின் ஆசனத்தில் அமர்ந்து சிறு ஓய்வெடுக்கும் நிமிடங்களில் 'திலகர்' எனும் பெயரில் அவன் எழுதிய கவிதைகளைப் படித்தேன்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்.....

என் ஆசிகள் என்றும் இவனுக்கு உண்டு.....

முன்னாள் வதிவிட ஆச்சாரியார்
பிரம்மச்சாரி
**ரமண சைத்தன்யா**
இலங்கை சின்மயா மிஷன்
கொழும்பு - 04.

# முகம் - கவிதை, ஓவியம், கதை

"மல்லியப்பு சந்தி"
மலையகத்தின்
ஒரு பக்கத்திற்கும்
என் வாழ்வின்
மறு பக்கத்திற்கும்
நுழைவாயில்.

மலையகம் அன்றும் இன்றும்
ஊர்வலங்களை
ஆரம்பிக்கும் இடம்.
நான் என்
உலகப்பயணத்தை
ஆரம்பித்த இடம் - ஹட்டன்
"மல்லியப்பு சந்தி"

என்
உயர்தர கல்வியும்
பல்கலைக்கழக படிப்பும்
என் ஆசிரிய சேவையும்
எனது நிர்வாகப் பணியும்

எனது
திருமண பந்தமும் - "லோயல்"
திலகராஜ் - என்ற
சமூக அடையாளமும்
"மல்லியப்பு சந்தி"யில் அடைந்த
மைல் கற்கள் .

"மல்லியப்பு சந்தி"யில் நடந்த
மாபெரும் மக்கள் திரள்வும்
மக்கள் போராட்டமும்
"நானூறு ரூபா சம்பளவுயர்வு"
போராட்டம் போல
இருந்ததுமில்லை - இனி
இருக்கப்போவதுமில்லை!

என் கல்லூரிக
வாசல் முன் லொறிகளில்
வந்திறங்கும் மக்கள்
கட்டுக்கோப்பாக
போராட்டக்களத்துக்கு
போவதையும்
அடுத்த அரை மணிநேரத்தில்

அவரவர் கலைந்து, கலைத்து
ஆங்காங்கே
கடந்து போவதையும்
கண்ணிமைக்காமல்
பார்த்துக்கொண்டிருந்தவன்
நான்.

பகலில் போராட்டத்தின் உக்கிரத்தையும்
இரவில் பொய்மையின் நாடகத்தையும்
நானறிந்த பலரையும்
அழைத்துச் சென்று;
அம்பலப்படுத்தியவன்
நான்.

ஏறக்குறைய
அந்த போராட்டத்தினை
எதிர்த்த ஓரே ஆள்
நானாகத்தான்
இருக்கவேண்டும்!
ஏனென்றால்
எல்லோரும்
போராட்ட பூமிக்கு
புறப்பட்டு வந்து சென்றார்கள் -ஆனால்

புடம்போட்டு

குடியிருந்தவன் நான்.

காட்டிக்கொடுக்கப்படும் -என

கட்டியங்கூறியவன்

நான்.

அது அப்படியே நிகழ்ந்தது...

அந்த

மாறா வடு

"மல்லியப்பு சந்தி"

கவிதையாக . தொகுப்பாக

வார்த்தைகளினால்

வார்த்தெடுக்கப்பட்ட

வரலாறாக............

அட்டைப்படத்தை அழகுற அமைத்த, நேரடியாக கணினியில் வரையும் ஆற்றல் கொண்ட கலைஞன், ஓவியன் தம்பி '**தவா**'வுக்கு நன்றிகள்.

என்னை அச்சுப் பதிப்புத் தொழிலுக்கு அறிமுகப்படுத்திய அன்புக்குரிய அண்ணன் திரு. ரவி **(M.R.M Graphics - 2nd Rohini Lane, Colombo 11)** அவர்களுக்கும்

அச்சுப் பதிப்புத் தொழிலில் என்னை ஊக்குவித்து உதவி செய்த Shakthi Enterprises - K Cyril C Perera Mawatha உரிமையாளர் 'Uncle'
அமரர் திரு. கே. குணரட்ணம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

என்னைப் பதிப்பாளனாக்கியது இவர்களே....

திலகர்
மயில்வாகனம் திலகராஜா
பாக்கியா பதிப்பகம்
கெய்சன் இம்ப்ரஸ்
இல. 05, முதலாவது மாடி,
2வது ரோகிணி ஒழுங்கை,
கொழும்பு-11.

# நினைவில் நிற்கும் கவிதைகள்...

திலகராஜாவின் '**மல்லியப்பு சந்தி**' கவிதைத் தொகுதி
கிளப்பிய ஆத்ம சிலிரிப்பின் பதிவு.

சில படைப்பிலக்கியங்கள் பற்றிய எனது முன் உரைப்புக் களையோ அல்லது மதிப்பீடுகளையோ நூலின் தொடக்கத்திலே தராது அந்த பதிகை நூலின் இறுதியில் வரவேண்டும் என நான் வற்புறுத்துவதுண்டு.

திலகராஜாவின் இந்தக் கவிதைத் தொகுதி பற்றிய என்னுடைய மனப்பதிவுகள், அவற்றிலும் பார்க்க அந்தத் தொகுதியில் வரும் கவிதைகள் பல கிளப்பிவிடும் மன உளைச்சல்கள், தேடல்கள் ஆகியன காரணமாகவே இக்குறிப்பு பின்னுரையாக வரவேண்டுமென நான் கருதுகிறேன்.

விமர்சனத்துக்கு இரண்டு வகையான பணிகள் உண்டு. சற்று ஆழமாக சிந்திக்கின்ற பொழுது அவை இரண்டுமே ஒரு நாணயத்தின் இரண்டுபுறங்கள்தான். முதலாவது, எழுதப்படும் விமர்சனம் வாசகரை குறித்த படைப்புக்கு ஆற்றுப்படுத்துவது, வழிநடத்துவது; இரண்டாவது அந்த படைப்பினுள்ளே கிடக்கும் கிளர்வுத் தளங்களை, அவற்றின் அமைவை, அவை அப்படைப்பினை எவ்வாறு முழுமை செய்கின்றன அல்லது செய்யவில்லை என எடுத்துக் கூறுவதாகும்.

திலகராஜாவின் இந்த கவிதைத் தொகுதியை வாசிக்கின்ற பொழுது வரவிருக்கும் வாசகரை ஆற்றுப்படுத்துவதிலும் பார்க்க நுகர்வுப்பணி முடிந்ததன் பின்னர் இருவரும் 'குறிப்புக்களை ஒப்பிட்டுப்பார்க்கும்' ஒரு நிலையே பொருத்தமானது என்று கருதுகிறேன்.

இக்கவிதைத் தொகுதிக்கான பதிற்குறியை இரண்டு, மூன்று நிலைகளில் ஏறுமுகமாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன். முதலாவது - உண்மையில் முதலாவது என்பதிலும் பார்க்க முதல் நிலைப்படுவது என்றே கூறவேண்டும் - இக்கவிதைகள் எவ்வாறு கலைத்துவ ஆக்கங்களாக அமைகின்றன என்பதையும், அமைகின்ற அந்த முறைமைகள் மூலமாக நம்மை கவருகின்றன, நம்மை தமக்குள் ஆழ்த்துகின்றன என்பதையும் நோக்குதலாகும்.

இந்த பதிற்குறியை ஏதோ ஒரு வகையான 'இரசனைத் திளைப்பு' என்று கருதிவிட கூடாது. ஏனெனில் இரசனை என்பது, அவ்விடயம் நமது மனதின் ஆழங்களை எவ்வாறு தொடுகின்றது என்பதிலேயே உள்ளது. மனித நிலைப்பட்ட விடய ஆழமெல்லாம், சமூக உறவுகளின் ஆழமில்லாமல் வந்துவிடாது; வந்து விடுபவையுமல்ல.

எனவே, இரண்டாவது நிலையில் கவித்துவ கவர்ச்சிக்கான அல்லது கவர்ச்சியின்மைக்கான பொருளை அறிந்து கொள்வ தாகும். இரசிக்கப்படும் பொருளின் சமூக உணர்வாழங்களைப் புரிந்து கொள்ளாமல், இரசனையைப் புரிந்து கொள்ள முடியாது. எனவே, இந்தக் கவிதைகள், எவ்வாறு தம்மை அசைக்கின்றன என்பதுபற்றிய தேடல் அல்லது பரிசீலனையாகும்.

மூன்றாவது - இது முக்கியமானது. ஆக்குபவரின் படைப்பாக்க இயல்புபற்றிய நோக்காகும். விரிவாக செய்யப்படும் நிலையில் இது ஒரு பகுப்பாய்வாகவே அமையும். ஆனால், இது மிக முக்கியம். என்னுடைய பதிற்குறிகளை மூன்று நிலைப்படுத்தி பார்ப்பதன் தேவையை மேலே கூறினேன்.

[ஈழத்து இலக்கியத்தில், குறிப்பாக 1960 களில், அது ஆழ அகலப்படுவதற்கு விடயப்பொருளின் சமூகத் தேவையையும் படைப்பவரின் சமூக நோக்கங்களையுமே விமர்சனத் துறையில் மிக மிக ஆணித்தரமாக வற்புறுத்தி வந்தோம். இது பல நற்பயன்களை

ஏற்படுத்திற்று. வாசகருக்கு மாத்திரமல்லாமல் எழுத்தாளருக்கும் தம் தொழிற்பாடுபற்றிய உணர்வினை ஏற்படுத்திற்று. அதனால் அந்த விமர்சனங்களும் அவை உணர்த்திய படைப்புக்களும் இலக்கியத்தின் மேற் செல்லுகைக்கு, சமூகத்தின் தொடர்ச்சியான முற்போக்குக்கு உதவின. அந்தக் கட்டம் நிறைவேறிவிட்டது. அந்த வரலாற்றைக் காட்டும் படைப்புக்களும் உள்ளன. படைப்பாளிகளும் உள்ளனர். விமர்சனத்திலும் ஒரு 'மேற்செல்லுகைக்கு'ஒரு முற்போக்குக்கு இடமுண்டு. இரண்டாவது கட்டமாக நாம் படைப்பின் கவர்ச்சியையும் படைப்பின் முக்கியத்துவத்தையும் படைப்பாளியின் திறனையும் ஒன்றிணைத்து நோக்குகின்ற ஒரு விமர்சன செல்நெறிக்கு வரவேண்டும். பொருளாதார மொழியில் சொன்னால் அது, இலக்கியம் விடுக்கும் கேள்வி (Demand) அதனை வழங்குதல் (Supply) விநியோகஸ் தர்களின் (விமர்சகர்களின்) பணியாகும்.]

மேலே கூறிய விமர்சனப் பணியினதும் அப்பாதையினதும் அளவு நன்கு புரிகிறது. உண்மையில் அதனைச் செய்வதற்கு ஒரு நுண்ணிய இலக்கிய பகுப்பாய்வை மேற்கொள்ள வேண்டும். துரதிஷ்டவசமாக அதனைச் செய்யக்கூடிய உடல்நிலை எனக்குமில்லை. அதுவரை காத்திருக்கும் பொறுமையும் திலகராஜாவிடமில்லை. விவாக நாளை நிச்சயித்துவிட்டு தாலிக் கொடியை அவசர அவசரமாகச் செய்கிற ஒரு தொழிற்பாடுதான் இது.

திலகராஜாவின் இந்தக் கவிதைகளை வாசித்து முடித்துள்ள இந்த நிலையில், வாசகர்கள் அவைபற்றி தங்கள் மன நிலைகளை உணர்ந்து கொள்ள / அறிந்து கொள்ளக் கூடியதாகயிருக்கும். இவ் விடயத்தில் **எனது முதலாவது வினா இந்தக் கவிதைகள் உங்களுக்கு / உங்களை என்ன செய்தன? என்பதேயாகும்.** இங்கு பதில் சொல்ல மலையகம் என்ற களத்துக்கு மிகமிக வெளியே செல்லலாம். ஈழத்தில், தமிழ் மக்களுக்கு ஏற்படும் ஒட்டுமொத்த அடக்குமுறைகள் பேசப்படுகின்றன. இன உணர்வுகளுக்குள் சிக்கிவிடாத முறையில் மானுட அவலம் பேசப்படுகிறது, சொல்லப்படுகிறது. போலிகளும் காட்டப்படுகின்றன. உண்மைகளும் முன்வைக்கப்படுகின்றன. இக் கவிதைத் தொகுதியின் பெயரான 'மல்லியப்பு சந்தி'யே நல்ல உதாரணம்.

மலையகத்தின் சோகம், அதன் இல்லாமைகள் மாத்திரமல்ல அந்த இல்லாமைகள் ஏற்படுத்தியுள்ள, மேலேயிருந்து கீழே திணிக்கப்பட்ட இயலாமைகளுமாகும்.

'வேள்வித் தீயொன்று வேண்டும்' என்ற கவிதையில் வேள்வித் தீயினைக் கோரும் வேகத்துக்குள்ளேயே ஒரு சோகம் இருக்கின்றது. மலையகத்துத் தலைமையினை படம்பிடித்துக் காட்டும் ''விழாக்காலம்'' என்ற கவிதையில்

*ஏழையெங்கள்*
*வாசலிலும்*
*''இண்டர் கூலர்''*
*வந்து நின்று*
*வணக்கம் போடும்!*

*''இறப்பர் சீட்டு'' வெட்டி*
*இலயத்துக்குக்குறுக்கே கட்டி*
*தோரணங்கள் தொங்கியாடும்!*
*இப்போது மட்டுமே ''நடக்கும்''*

*எங்கள் தலைவருக்கு*
*பலமாக தொந்தியாடும்...*
*சிப்பிக்குள் முத்து என்றும்*
*சேவைத் திலக மென்றும்*
*மலையக மைந்தன் என்றும் - இந்த*
*மண்ணுக்கே தன்னுயிர் என்றும்*
*சுத்தத் தமிழில்*
*சுவரில் போஸ்டர்கள்*
*சுருதி சேர்க்கும்.*

*வாடகைக்கு வாங்கப்பட்ட*
*வார்த்தைகளும், ஒற்றுமையும்*
*வேற்றுமைகள் மறந்து நிற்கும்!*

'வாடகைக்கு வாங்கப்பட்ட வார்த்தைகளும்' என்ற பதப் பிரயோகம் மிக அற்புதமானது.

திலகராஜா கண்டிக்கிறார் என்பது தெரிகின்றது. ஆனால் அதிலும் பார்க்க முக்கியம் கவலைப்படுகிறார் என்பதுதான். இக் கவிதைத்தொகுதியின் முக்கியமான குணாம்சம் அது மலையகத்தின் இயலாமைகளை, அங்கு ஏற்படும், மனித இழிவுகளை எடுத்துக்கூறும் முறைமைதான்.

*அம்பிகையே! - உன்*
*அருகில் அமர்ந்திருக்கும்*
*அந்த சிவனே நேரில் வந்து*
*உனக்கு என்ன வேண்டும்?*
*எனக்கேட்டால்*
*உன் கோயில்*
*கூரைக்கு தகரம் கேட்கும்*
*என் மக்களின் அன்பு காண*
*இறங்கி வா!*

என்று கேட்கும் பொழுது மேற்கிளம்பும் ஏழ்மையின் ஓலம், நம்மை சிலிர்க்க வைக்கின்றது. இக்கவிதைகள் வாசிப்பவரை நிலைகுலைக்கின்றன. அதிர்வு சலனங்கள் மின்வேகத்தில் ஓடியோடி மீள்கின்றன. உண்மையில் நம்மை இந்த கவிதைகள் பாதிக்கின்றன. இக்கட்டத்திலே தான் மலையக இலக்கியம் பற்றிய சில அவதானிப்புகள் தவிர்க்க முடியாததாகின்றன.

N.S.M. இராமையா, தெளிவத்தை ஜோசப் போன்ற புனைகதை ஆசிரியர்கள் உள்ளனர். சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் 'வீடற்றவன்' நாவலை மறந்து விடமுடியாது. ஆனால் கவிதைத்துறையில் மலையகத்தின் தேட்டங்கள் யாவை? கவிஞர்கள் இல்லையென்று கூறிவிட முடியாது. ஆனால், மலையகத்தின் மண்வாசனையில் அரசியல் வேட்கைகளை, சுகங்களை துக்கங்களை ஒழுங்குதிரட்டித்தரும் கவித்துவப் படைப்புக்கள் யாவை? இப்படிச் சொல்லும் பொழுதே மலையகத்துக் கவிஞர்களின் ஒரு பாரிய பட்டியலுடன், மலையகத்தை தெரியாதவர்கள் மலையக இலக்கியம் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதையுண்டு? என கோபாவேசத்துடன் கிளம்புகிறவர்களை கிளம்பப்போகின்றவர்களை எனக்குத் தெரியும். சத்தமிடுகை வேறு. நியாயத்தை வாதிப்பது வேறு. எனது வினா இதுதான். சி.வி.வேலுப்பிள்ளை தனது ஆங்கில கவிதைத் தொகுதியான **In Ceylon's Tea Garden** என்ற தொகுதிமூலம், ஏற்படுத்திய கவித்துவத்தாக்கத்தினை ஏற்படுத்தி யுள்ள மலையகத் தமிழ் கவிதைகள் யாவை?.சி.வி. தனது **In Ceylon's Tea Garden** என்ற கவிதையிலே கொண்டு வந்த

*And so the tom-tom's throb*
*That for a hundred years*
*In fettered darkness held*
*My bronze bodied men*
*Shall sound yet again*

*From the mountain heights*
*To the valleys below*
*With a clearer call*
*With a surer call.*

என்ற வரிகள் அமரத்துவம் வாய்ந்தவை. மலையக வாழ்க்கையின் சோகம், அதற்குள் பிழிந்து கிடக்கிறது.

திலகராஜாவின் கவிதைகள் கவித்துவ உச்சத்துக்கு வந்துவிட்டன என்று நான் சொல்லவில்லை; சொல்லிவிடவும் முடியாது. ஆனால், ஒன்றை நான் நிச்சயமாக உணர்கிறேன். திலகராஜாவின் கவிதைகள் கிளரிவிடும், நம்பிக்கை வறண்டுபோன சோகம், இயலாமை ஆகியவற்றின் ஊடே தமிழ்க் கவிதையில் இன்னும் கொண்டுவரப்படாத மலையகத்தின் மானுடச் சோகங்களின் ஆழத்தை உணர்கிறேன்.

குளங்களிலே நீராடுகின்றவர்களுக்கு ஒரு அனுபவமுண்டு. மேலுள்ள நீர் சற்று கதகதப்பாகவே இருக்கும் ஆனால் மூக்கைப் பிடித்துக்கொண்டு மூழ்கி சற்று ஆழமாகச் செல்லும் போது உடலில் ஒரு குளிர் பரவும். அந்தக் குளிர் உணரப்பட்டதும் மூழ்குபவர் மேலே கிளம்புவார். அந்த வேகத்தில் அவர் நீரின் மேல்மட்டத்திற்கு மேலே செல்வார்.

திலகராஜாவின் கவிதைகள் பல அந்தக் குளிரையும் அந்த குளிரிலிருந்து விடுபடுவதற்கான எகிர்வையும் அளிக்கின்றன. அந்தவகையிலேதான் திலகராஜாவின் கவிதை மிக முக்கிய மாகிறது. ஆழங்களும் ஆழங்களின் சோகமும் எகிர்வுக்கான வேட்கையும் அந்தக் கவிதைகளிலே நன்கு தெரிய வருகின்றன.

'மல்லியப்பு சந்தி' தமிழ் புதுக்கவிதைத் தொகுதியாகும். புதுக்கவிதையின் ஒரு முக்கியபண்பு இசைக்கும், சொல்லின் அசைவிற்குமுள்ள இயைபுகளில் இருந்து அது விடுபட்டதாகும்.

அதாவது, புதுக்கவிதை 'பா' அல்ல. பாடலின் ஊடாக வரும் கவித்துவ வனப்பே அதற்கு முக்கியமானதாகும்

புதுக்கவிதையின் இந்த எழுச்சிக்கும் அதன் சமூகக் களத்துக்கும் முக்கிய உறவுவுண்டு. வாழ்க்கையின் ஒத்திசைவு (நவீனத்துவம் காரணமாக) உடைந்துபோன நிலையிலேயே புதுக்கவிதை (New Verse) தோன்றிற்று. இவ்வாறு கூறும்பொழுது புதுக்கவிதை லயத் தொனியை (Rhythmic Tone) இழந்து விட்டதாக கொண்டுவிடக்கூடாது. புதுக்கவிதையின் பிதா மகர்களில் ஒருவரான Elliot புதிய கவிதையில் லயங்கள் வரிக்கு வரி வேறுபடும் என்கிறார். இதுமாத்திரமல்ல, புதுக்கவிதையின் வரியமைப்புப் பற்றிய ஒரு முக்கியமான விடயமுண்டு. **அதாவது, புதுக்கவிதையின் ஒவ்வொரு வரியும் ஒரு கண்வீச்சுக்குள் அமைகின்ற நீட்சியையும் பொருளையும் கொண்டிருத்தல் வேண்டும்.** உண்மையில் புதுக்கவிதை என்பது பாரம்பரிய சமூக உறவுகளின் சீர்குலைவுகளையே ஊற்றுக்காலாகக் கொண்டது.

புதுக்கவிதையின் இந்த அம்சங்களை மனத்திருத்திக்கொண்டு மலையகத்தை நோக்க வேண்டியது அவசியமாகின்றது. வரலாற்று ரீதியாக மலையகக் குடியிருப்பு என்பது பெருந்தோட்ட முதலாளித் துவத்துக்காக ஏற்படுத்தப்பட்ட, நாற்று நடவு செய்யப்பட்ட ஒரு சமூகக் குழுமமாகும். அந்தப் பாரம்பரிய அமைப்பை தோட்ட முதலாளித்துவம் ஓரளவுக்கு ஊக்குவிக்கின்றது. ஆனால், முற்று முழுதான முதலாளித்துவ சுரண்டலும் அதற்குள் உண்டு. இது ஒரு சுவாரஷ்யமான நிலை. இதனாலேயே தொழிற் சங்கங்களிலிருந்து மலையகத்தில் அரசியல் பிறக்கின்றது. மற்றைய இடங்களில் பெரும்பாலும் அரசியலில் இருந்தே தொழிற்சங்கம் வரும். இங்கு நிலைமை மாறி. இந்த முரண் நிலை மலையகச் சமூகத்தின் ஆத்மா எனும் வகையில் இன்று அமைந்துள்ளது.

*இலங்கைத் தேசத்தை*

*கூடையில் சுமந்தும் - தன்*

*இலக்கை அடையாமலேயே*

*கூனிப்போனாள்.*

'கொழுந்து பிடுங்கிவிட்டு அல்லது புல்லுவெட்டிவிட்டு' (அதுவரை) முதலாளித்துவத்தின் பகடைக்காய்களாக இருந்துவிட்டு லயத்தில் லயம் வழிவரும் சமூக வாழ்க்கையிலே பாரம்பரியம் பின்பற்றப்படுகிறது.

மலையகத்தில் இன்றும் வாய்மொழிப் பாடல்களுக்கு இடமுண்டு. இந்தப் பாரம்பரியத்திலேயே இதுவரை வந்த பல மலையகத்து கவிஞர்களை இனங்கண்டு சொல்ல வேண்டும்போல தெரிகிறது. சக்தீ அ. பால- ஐயா, குறிஞ்சித்தென்னவன், சிதம்பர நாத பாவலர் போன்றோரின் ஊடே ஒரு வாய்மொழிப் பாரம்பரியம் உணர்த்தப்படுகிறது என்றே கூறவேண்டும்.

ஆனால், இந்தநிலைமை மாறத்தொடங்கிற்று. புதிதாக கிளம்பிய இளைஞர்கள் மரபுவழிப் பாடல்களை எழுத முடியாமலே போய்விடுகிறது. தோட்டத்துக் கல்வி நிலையும் இதற்கு ஒரு காரணமாகும்.

புதிய தலைமுறையினராக வந்தவர்கள் தோட்டத் தளத்தில் கால் பதித்தவர்களாய் மலையகத்து நகரங்களை செயற் களங்களாகக் கொண்டு தொழிற்படும் ஒரு பண்பு படிப்படியாக வளரத் தொடங்குகின்றது. அவர்களின் இயல்பான இலக்கிய வெளிப்பாடுகளுக்கு மல்லிகை சி.குமார் போன்றவர்கள் நல்ல உதாரணம்.

திலகராஜாவின் இந்தக் கவிதைத்தொகுதி மேற்கூறிய செல்நெறியின் மேலும் ஒரு படிநிலையாக அமைவதாகவே எனக்குப்படுகிறது. அதற்கான பிரதான காரணம் திலகராஜாவின் ஆழ்நிலைப்பட்ட வாழ்க்கை வளர்ச்சியாகும் (Personal History).

இக் கட்டத்திலேதான் திலகராஜா எனும் படைப்பாளியின் ஆளுமை முக்கியத்துவம் தெரிகின்றது. திலகராஜா இப்போது

மேல்கிளம்பும் புதிய மலையகத் தமிழுக்கான ஒரு நல்ல குரலாகிறார். ஆரம்பகால 'லயத்து' வாழ்க்கை, பரந்தன், கிளிநொச்சி தொடர்பு, சிலகாலம் சிங்கள மொழிவழிக்கல்வி பயிலுகை, பின்னர் மலையகத்தின் நகர்புற பாடசாலைகளின் சூழல் நிறைவாக பல்கலைக்கழகம். திலகராஜாவின் கவிதைகள் மூலம் ஒன்று நன்றாகப் புரிகின்றது. லயத்து வாழ்க்கை என்பது பிற்கால மேல்நோக்கிய அசைவியக்கத்துக்கான முகவரியல்ல. அந்தத்தளத்தில், திலகராஜாவின் கால்கள் நிலையாகவுள்ளன. ஆனால் அவரது வளர்ச்சி அவருக்கு பல புதிய 'வெளிகளை' அறிமுகம் செய்துள்ளது. இன்றைய நிலையில் திலகராஜாவின் கவிதைகள் இந்த ஆளுமைச் சேர்வின் உடன்பாட்டு நிலையின் (Positive) வெளிப்பாடாகும்.

மலையகத்தின் பிந்திப்போன விடியல்களின் வெளிச்சங்கள் இந்தக் கவிதைத் தொகுப்பிலே தெரிகின்றன. இதிலுள்ள ஒரேயொரு சிக்கல் என்னவென்றால் திலகராஜா என்கிற முகாமையாளன் இந்தப் படைப்பாக்கச் செழுமையையும் பார்வைச் செம்மையையும் மண்பற்றிய ஸ்திரப்பாட்டையும் எவ்வளவு காலம் சமநிலையாக இணைத்துப் பேணப்போகிறார் என்பதுதான்.

திலகராஜாவின் வளர்ச்சியை விரும்பும் அதே வேளையில் தொடர்ச்சியையும் வற்புறுத்த விரும்புகிறேன்.

மிக்க அன்புடன்

பேராசிரியர்

கார்த்திகேசு சிவத்தம்பி

29.09.2007

# மாரியம்மனுக்கோர் மனு



**அ**ம்மா! - உன்
அருள் வேண்டி
காத்திருக்கும் - என்
மக்களுக்கு
ஆறுதல் சொல்ல
இறங்கி வா!

**அ**ம்பிகையே! - உன்
அருகில் அமர்ந்திருக்கும்
அந்த சிவனே நேரில் வந்து
உனக்கு என்ன வேண்டும்?
எனக்கேட்டால்
உன் கோயில்
கூரைக்கு தகரம் கேட்கும்
என் மக்களின் அன்பு காண
இறங்கி வா!

**து**ர்க்கையே!
எங்கள் தலைவர்கள் - திரு
“வோட்டு”ப் பிச்சைக்காக
ஐந்தாண்டுக்கு ஒருக்கால்
வந்து என் மக்கள்
வாயிற் படியேறி
என்ன வேண்டும்?
எனக் கேட்டால் - உன்
ஆலயப்படிக்கட்டுக்கு
ஐந்து பக்கட் சீமெந்து கேட்கும்
என் மக்களின் ஆன்மீகப்
பணிபார்க்க இறங்கி வா!

**மா**காளியே!
மாதம் வரும் சம்பளத்தில்
அட்வான்ஸ் தொடங்கி -
சங்கத்துக்கு சந்தா வரை
அத்தனைக்கும் கழித்த பின்னும் - உன்
ஆலயத்துக்கும் தொகை ஒதுக்கி
ஆண்டுத் திருவிழாவில்
தேரோடும் பேண்ட் செட்டும்
கரகாட்டம், ஒயிலாட்டம்
கான மயிலாட்டம் காணும்
என் மக்கள் பக்தி காண
கனகாம்பிகையே
இறங்கி வா!

**ச**க்தியே! நீ
கிராபிக்சின்* கிருபையால்
“சக்தி” யில்
கருமாரியம்மனாய்
உருமாறி வருவது கண்டு
என் மக்கள்
நெஞ்சுருகி நெகிழ்கிறார்கள்
பாணையத்து அம்மனாய் வரும்
பார்வதியே!
என் மக்கள்
பரிதவிப்பைப் பார்க்க
ஒரு முறையேனும்
*பணிய லயத்து அம்மனாய்
படியிறங்கி வா!

**மா**ரியே!
ஆண்டாண்டு காலமாய் - உன்
அருளையெண்ணித்
திழைத்திருந்த இருந்த
என் மக்கள் - உன் மீது
நம்பிக் கையிழந்தவராய்
இப்போது
மேரியை நம்பிப்போய்க்
கொண்டிருக்கிறார்கள்
அவர்களைக்காக்க...
இல்லை... இல்லை...
உனைக் காக்க
உடனே ஓடி வா!

*Graphics

*பள்ளத்துப்பிரதேசத்தில் அமைந்துள்ள லயம்


பராசக்தியே!
இந்த மானுடத்தின்
விழிவுக்காக - காணி
நிலம் வேண்டி கவி படித்த
புரட்சிக்கவி பாரதிக்கே
இறங்கி வராதவள் நீ -
ஏழைகள்
என் மக்களுக்காய்
இரங்கி.... வரப்போவதில்லை - என
எடுத்துச்சொல்லவேனும்
ஒரேயொரு முறை
இறங்கி வா!

என் கவியின்
உண்மையுணர்த்திப்
போ!

மூலக்குறிப்பு:

முதற்பக்க
கவிதையாதலால்
கடவுள் வாழ்த்தென்று
கணித்தவர்கள் மன்னிக்கவும்.

# விடிவு



எமக்குக் கிட்டும் போது
பறிப்பதும்
நாம் வளரும் போது
தறிப்பதும்
நாம் வீழும் போது
சிரிப்பதும்
நம்மைக் கறையான்களாய்
அரிப்பதும்
தண்ணீரைக் "கட்டி நம்மை"
மறிப்பதும்
துவேசத் தீ கொண்டு
எரிப்பதும்
இங்கே நிகழ்வன
இப்போ...

அவர்கள்
வீழ்த்தும் போதெல்லாம்
வீழ்வதும்
விரும்பும் போதெல்லாம்
தாழ்வதும்
உழைத்தே நாம்
மாள்வது(மா)
யிருந்தால்
மீள்வது எப்போ?

கொடியன கண்டு
துடிக்கவும்
கொடுமைகள் கண்டு
வெடிக்கவும்
கொடியவர் தன்னை
அடிக்கவும்
கொண்ட பகை
முடிக்கவும்
நாம் படிப்பது
எப்போ?

நமக்கு
அப்போ...

# தீக்குச்சி



அந்த
கரும்புள்ளியும்
வெண்குச்சியும்
சுயம் கண்டு
சொல்கின்றன...

எனக்கு
தலை மட்டுமே உண்டு
உள்ளே ஒன்றுமே இல்லை
உங்கள்
தலைவனைப்போல்...

நான் தட்டும் போது
தீப்பொறியாக மட்டுமல்ல
தட்டி விடும்போது
தீ பொறியாகவும்
ஆவேன் உங்கள்
போராளிகள் போல்

எனக்குத் தலை(க்) கனம்
அதனால்தான் - தலை
தட்டியவுடன் தானாக
அழிந்து போகிறேன் - உங்களில்
பலரைப் போல்

இளைஞனே!
பெட்டிக்குள் இருக்கும் வரைதான்
நீகுச்சி -
வெளியேறு
தட்டிக்கேள் - நீ
தீக்குச்சி!

உழைப்பாளியே!
உன் உருவம் ஒல்லியாய்
இருந்தாலென்ன
உரசு - உன்
உழைப்பு
நெருப்பென்று காட்டு.

மூலக்குறிப்பு:

எப்போதோ
தீக்குச்சியை
தட்டிய போது
என்னோடு
பற்றிக் கொண்ட
வரிகள்.

# செய்யும் தொழிலே...



ஒரு வண்டில்
ஒரு விளக்குமாறு
ஒரு கூடை...
ஒரு மனிதன்

அவன்
அழகாயில்லை
அழுக்காயிருக்கிறான்

வெற்றிலைக் குதப்பிய வாய்
வேர்வை கலைந்த முகம்
விரல்களை மேவிய நகம்

கலைந்த கேசம்
கறுத்த தேகம்
காவிப்பற்கள்

சுத்தமாயவன்
சுத்தமாயில்லை


நகரத்தின்
நாகரீக அழுக்குகளை
கூட்டிச் சேர்த்து
ஏற்றிச்சென்று
எங்களூர்
முகப்பில் கொட்டி ;
வந்த பிறகு
வழியோர
வாய்க்காலில் - தன்
வண்டிலை நிறுத்தி
சுத்தமாய் தேய்த்து
சோப்புப் போட்டுக்
கழுவிக் கொண்டிருக்கிறான்
நகர சுத்தித் தொழிலாளி.

மூலக்குறிப்பு:

ஹட்டன்
மல்லியப்பு
ஓடையில்
ஊற்றெடுத்த
வரிகள்

17.06.2001

# வேள்வித் தீயொன்று வேண்டும்



**கா**வல் அரண்கள்

காம அரங்கமாயின...

சீருடை தரித்த

சிப்பாய் நரிகள் - எங்கள்

சகோதரிகளின்

சதையைப் புசித்து

ஏப்பம் விடுகின்றன...

மணற் சுவர்

மதில் அமைத்து

அமர்ந்திருக்கும்
அக்கிரமப் பூனைகள்
காவல் பார்ப்பதாய்ச் சொல்லி
காமம் கொண்டு
பாய்ந்து வருகின்றன...

தேசம் காப்பதாய்
தேகம் புசித்துவரும் - இந்த
பயிர்மேயும் வேலிகளுக்கு
நீதியிலும் வேலிகளில்லை,
அவ்வப்போது
ஆதாரம் இல்லையென்று
ஆதரவே கிடைத்தது...

தன்னினச்சேர்க்கை
கூடாதென்பதை
தங்களுக்கேற்ப
அர்த்தப்படுத்திக்கொண்ட
அந்த அக்கிரமப் பூனைகள்
தன் - இனம் தவிர்த்து
தமிழினத்தாய்களிடம்

தங்கள் வக்கிரத்தினை
வற்புறுத்தித் திணித்தன...

செம்மணியில், மிருசுவிலில்
செத்துப்போன,
செத்துப்பிழைத்த - எங்கள்
சகோதரிகள் - இன்று
தலைநகர வீதிகளிலும்
தலை விரி கோலமாய்...

துப்பாக்கி ஏந்திய
துச்சாதனன் கைகளில்
துகிலுரியப்பட்ட
திரௌபதைகளாய்
தமிழ் அன்னையும் தங்கையும்
பரிசோதனைகளின் பெயரில்
பட்ட வேதனைதான்
எத்தனை?

இவையொன்றும்
இன்றைய ஆரம்பமுமல்ல

இப்போதைக்கு முடிவுமல்ல
எண்பத்து மூன்று ஜூலை முதல்
எல்லா ஜூலையிலும்...

இனத்துவேசத் தீயில்
இந்த தேசம் எரியும்
சுவாலை
நீளும் வரை...

நீதியில் நீதி வேண்டி
நாமெல்லாம் - ஓர்
வேள்வித் தீயில்
இறங்கும் வரை...

மூலக்குறிப்பு:

வன்முறையைத்
தூண்டக்கூடாது
சரிதான்
வன்முறையைக் கண்டு
துலங்காமலுமாவிருப்பது?
மருதானை சோதனைச் சாவடி
பாலியல் வன்முறையின்
பிரதிபலிப்பு
29.06.2001

# விழாக்காலம்



எங்களூர்
தெருக்கள் எல்லாம்
பெரு விழாக்கோலம்
பூண்டிருக்கும்!

ஏழையெங்கள்
வாசலிலும்
"இண்டர் கூலர்"
வந்து நின்று
வணக்கம் போடும்!

"இறப்பர் சீட்டு" வெட்டி
இலயத்துக்குக்குறுக்கே கட்டி
தோரணங்கள் தொங்கியாடும்!
இப்போது மட்டுமே "நடக்கும்"
எங்கள் தலைவருக்கு
பலமாக தொந்தியாடும்...

சிப்பிக்குள் முத்து என்றும்
சேவைத் திலக மென்றும்
மலையக மைந்தன் என்றும் - இந்த
மண்ணுக்கே தன்னுயிர் என்றும்
சுத்தத் தமிழில்
சுவரில் போஸ்டர்கள்
சுருதி சேர்க்கும்.

வாடகைக்கு வாங்கப்பட்ட
வார்த்தைகளும், ஒற்றுமையும்
வேற்றுமைகள் மறந்து நிற்கும்!

எதற்கோ!
எப்போதோ!
எங்கேயோ!
இறந்துபோன எம்மக்கள்
தியாகி யெல்லாம்...
இப்போது இங்கே
எல்லாம் அறிய
வாக்குகளுக்காய்
விளம்பரமாவர்!

வீடுகள் சொந்தமாகும்!
வீதிகளும், பாலங்களும்
கோவில்களும், கூரைகளும்
வார்த்தையாலே
வண்ணம் பெறும்!

பிரஜாவுரிமை பெற்றகதை
சம்பளவுயர்வுக்கு
பேச்சுவார்த்தை
போன கதை
சந்தியிலே சேர்ந்து குந்தி
சத்தியாகிரகம் செய்த கதை
பேச்சுக்களின் வீச்சில்
வந்து விழும்
வார்த்தைகளாம்.

காட்டு விலங்குகள்
கானகத்துப் பறவைகள்
கதிரை, மேசையென்று
அஃறிணையும்
ஜடப்பொருளும்
எம்மக்கள்
சின்னமாகும்!

கடந்த கால
வாக்குறுதிக ளெல்லாம்
கனவாய்ப்போக
நிகழ்காலக் கதைகளிலே
எதிர்காலத்தினை
எதிர்பார்த்து
எங்கள் மக்கள்
இப்போது நிற்பது
தேர்தல் காலத்தில்

எங்களூர்
தெருக்களெல்லாம்
பெரு விழாக்கோலம்
பூண்டிருக்கும்!

நன்றி – வீரகேசரி

# அவள் இளைப்பாறுகிறாள்



அந்த

மலை முகட்டினில்

அலையும் மேகங்களைத்

தொட்டுப் பழகியவள்

இன்று அதனை

விட்டு விலகுகிறாள்...

மென்மையான

அவள் கரங்களில்

செம்மை நிறம்

தேயிலைச் சாயம்

அவள் கரங்களில்

மருதாணியாக...

இலங்கைத் தேசத்தை

கூடையில் சுமந்தும் - தன்

இலக்கை அடையாமலேயே

கூனிப்போனாள்.

அதோ

இளம்பூவாய்

தேயிலைச் செடிகளுக்குள்

தேகத்தைப்

புதைத்துக் கொண்டவள்

இன்று

தேயிலைச் சூட்டில்

புதைந்து

புகைந்து

பழுத்த பூவாய்
பாத இரணங்களோடு
மலை இறங்குகிறாள்

கூடை சுமந்த
முதுகில்
கூனலறிகுறிகள்
கொழுந்து பறித்த
மென் கரத்தில்
கொப்பளிப்புகள்...
மனம் முழுவதும்
ஏமாற்றத்தின்
தவாளிப்புக்கள்...

பதினாறைத்
தொட்ட போது
வரவேற்புரை வடித்த
தோட்டம்
இன்று
பயணம் முடியும் போது
பிரியாவிடை சொல்கிறது

இத்தனை காலமும்

அவளுடன்

நேசமாயிருந்தனவே

அந்த செடிகள் மட்டும்...

ஓரக்கண்ணில்

சுரந்த

ஈரக்கண்ணீர்

தே இலையில் பட்டுத்

தெறிக்கின்றது

அன்பின்

அடையாளங்களாக...

கணக்குப் பிள்ளையின்

கட்டளைக்கும்

கங்காணிகளின்

அதட்டல்களுக்கும்

அஞ்சி நடுங்கியவள்

அடிமைக் கயிறு

அவிழ்க்கப்படுகிறாள்

ஐந்தில் அல்ல

ஐம்பதில் தான்

அவள் சுயமாக நடக்க

நடைவண்டி

தயாராக்கப்படுகிறது.

அவள் இளைப்பாறுகிறாள்

அதோ...

"பென்ஷனோடு"

சுதந்திரத்தையும் சேர்த்து

சுமந்து வருகிறாள்.

*மூலக்குறிப்பு:*


*எல்லோருக்கும் தொழிலில்*

*மட்டுமே நிர்வாகம்*

*நமக்கு மட்டும் ஏன் வாழ்க்கையிலும்?*

நன்றி – ஹட்டன் பொஸ்கோஸ் கல்லூரி சஞ்சிகை (தினேஸ்)

# மரணத்தில் தொடங்கும் வாழ்வு



இவை

எழுதப்படாத சரித்திரம்.

நாம்,

இரு தேசத்தின்

இடைவெளியை

நடந்தே

கடந்தவர்கள்.

நெல் வயல்வெளிகளில்

பருத்திக்காட்டில்

பஞ்சம் பிழைத்தவர்கள்.

தேயிலைக்காட்டில்

தேங்காய், மாசி வ(த)ருவதாகத்

திரட்டிவரப்பட்டவர்கள்.

வீடு கட்டி

விருட்சமாய்

வாழலாம் என

நடக்க வைத்தே

நாடுகடத்தப்பட்டவர்கள்.

காடு கடக்கும்போது

காட்டிலேயே

"வீடுபேறு"

வென்றவர்கள்.

எங்கள்

தோற்றமே

மரணத்தோடுதான்!

அந்தப் பயணத்தின்

எச்சங்கள் மட்டுமே

இன்று வரை

வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

மரணித்துக்கொண்டே...

கலவரங்களும்

வன்முறைகளும்

எம்மை இருந்திருந்து

காவுகொள்ளும்.

இப்போது - எங்கள்

கருவறைகளே

கல்லறைகளாக்கக் கண்டோம்.

மருத்துவரின்

கத்தரிக்கோல்

ஆக்குவதற்கன்றி

அழிப்பதற்காய்

அசைவது - எங்கள்

அன்னையரின்
கருவறையில்...


திட்டமிடலெனும் பெயரில்
திட்டமிட்டுக் கொல்லப்பட்டோம்.

கரணம் தப்பினால்
மரணம் என்பார்கள்.
எங்களுக்கோ
மரணம் தப்பினால்தான்
ஜனனம்.

மூலக்குறிப்பு:

நமது உயிர் நமக்கு வளம்.
வளம்;
பொருள்தேட மட்டுமல்ல
போராடவும்தான்.
இன்று இரையாவது;
நாளைய இளைஞர்கள்.

# அதே பழைய விடியல்



ஆண்டு பிறந்தது

அடுத்த ஒரு மணிநேரத்தில்...

எட்டுத்திக்கும்

பட்டாசுகள்

கொட்டித் தீர்க்கப்பட்டது...

எல்லாத்துன்பங்களும்

கொழுத்தித்

தீக்கிரையாக்கப்பட்டதோ?

வானெங்கும்

வண்ணக்கோலம்.

உடுக்கள்

உருமாறி

சிதறியதோ...!

எல்லோர்

முகத்திலும் இன்பப்

புன்முறுவல்.

புதிய கிரகம் ஒன்றினுள்

புகுந்துவிட்ட

புத்துணர்ச்சி...!

ஒருவருக்கொருவர்

வாழ்த்துக் கூறி

களித்துப்போனார்கள்

களைத்தும் போனார்கள்!

ஒலியும்

ஒளியும்

உச்ச இரவிலும்

ஒலி(ளி)த்துக் கொண்டிருந்தது

அங்கே ஒருகும்பல்

குதூகலித்துக்கொண்டிருந்தது...

ஒரு மணி

நேரத்தின் பின்

இவையெல்லாம்

ஓய்ந்து போனது...

உறங்கி மீண்டும்

விழித்த போது...

அடங்கிய பட்டாசுகள்

அலுத்துப்போன

முகங்கள்

நசுங்கிய நட்சத்திரங்கள்

நலிந்து போன

ஒலி(ளி)பரப்புகள்

அதே பழைய

விடியல்!

மூலக்குறிப்பு:

1997 – 01 – 01

பல்கலைக்கழக முதலாமாண்டு


முதன் முதலாக

தலைநகரில் கொண்டாடப்படும்

பொய்யான

புத்தாண்டைப் பார்த்து

பிறந்த வரிகள்.



**ச**கோதரா!

சரித்திரம் படைக்கவென

சந்தியில் சந்தித்தோமே

சாதித்தது என்ன?

சிந்தித்தாயோ...

சத்தியாக்கிரகத்திற்காய்;
சந்தியை அலங்கரித்தோம்
- இந்த
சந்ததி காணாத
சரித்திரம் நாம் என
சத்தியம் செய்தோம்

நானூறு ரூபாய் கேட்டு
நாற்காலிக்கு மாலைபோட்டு
நாம் போட்ட
நாடகம் பார்க்க
அம்மாவின் நகையை
அடவு(கு) வைத்தோம்
- எங்கள்
அவசரப்பசிக்குதவும்
அம்மாவின் காதுகளும்
இன்று பட்டினியாய்...

கொழுந்து கூடை விட்டெறிந்து,
கொதித்தெழுந்து, குரலெழுப்பி,
விழித்திருந்து, வேண்டிநின்று,
மலையகமே
ஓரணியில்
சென்றது ஞாபகமுண்டு
- சேர்ந்து
நின்றது ஞாபகமுண்டு
வென்றது ஏதுமுண்டா?

அதிகாரி, தொழிலாளி
ஆசிரியர், மாணவர்
அரசியல்வாதி,
இலக்கியவாதி என்று
"அண்ணனும் தம்பியுமாய்"
அனைவரும் ஓரணியில்
சென்றது ஞாபகமுண்டு
- மேடையில்
நின்றது ஞாபகமுண்டு
வென்றது ஏதுமுண்டா?

எது வேண்டும்!
எதைக் கேட்டோம்!
என்ன கிடைத்தது!
எப்படிக் கிடைத்தது!
இவை இன்று
எம் முன்னே
விசுவரூபம்
எடுத்திருக்கும்
வினாக்கள்.

அந்தக் கறுப்புப்பட்டியை
நம் உரிமைக்குரலடக்கக்
கழுத்தில்
கட்டிக்கொண்டோமோ?
அந்த வெள்ளைக் "குல்லா"

இன்னும் எத்தனை
ஜென்மத்திற்கும் எம்மை
மூடிவைத்திருக்கும்?

அன்று
அழைக்கப்பட்ட உறவுகள்
தொலைத்துவிட்ட இரவுகள்
ஒன்றிணைந்த தலைமைகள்
ஒட்டியிருந்த தவளைகள்
எல்லாம் இப்போது எங்கே?

நானும் நீயும்
நம் மக்களும்
அதே சந்தியில்...

மலையகம் கண்ட
மாபெரும் எழுச்சியான
நானூறு ரூபா
சம்பள உயர்வு போராட்டத்தையும்
மக்கள் காட்டிக்கொடுக்கப்பட்டதையும்
என் கண்களால்
இன்றும் காணமுடிகிறது
இக்கவிதையூடே....
*2001 Feb*

*நன்றி "நாடோடிகள்" புதிய பண்பாட்டு அமைப்பு வெளியீடு*

# பட்டம் பறக்குது

பட்டினி கிடந்து
பாதம் நோக
பல மைல் நடந்து...



பாதிச்சுவரும் - மீதி
பொலித்தீன் கவரும் போட்ட
தோட்டத்துப் பள்ளியில்



சாணம் மெழுகிய
கட்டாந்தரையில்
சாக்குப் போட்டமர்ந்து

முற்றத்தில் மணல்பரப்பி
மண்டியிட்டு "அ" எழுதி
விரல்நோக "ஆ"...
வென்றழுது...



மூத்தவன் எழுதி
முடித்த "சிலேட்டை"
வாங்கி எழுத
வரிசையில் நின்று...

குளிரில் நடுங்கி
வெயிலில் காய்ந்து
பள்ளிக்கூட விசுக்கோத்தை
பகலுணவாக்கி...

விடியவே எழுந்து
வீதியருகே
மேவி வளர்ந்த
வல்லாறை பிடுங்கி...

கூவி விற்று
வந்த பணத்தில்
கொப்பி வாங்கி
கோப்பு செய்து...

பேனை வாங்க;
சேனை சென்று
மண்வெட்டி பிடித்து
மரக்கறி வளர்த்து...

அவ்வப்போது
வீட்டு வேலை
என்ற பெயரில்
விறகு வெட்டி...

கல்வியைக் கடிக்கும்
வறுமையைப் போல
பயிர்ச்செடி கடிக்கும்
பூச்சிகள் கொல்ல
நாசினி தெளித்து...

சேர்ந்த பணத்தில்
சோர்ந்த என்
"நீல"க்காற்சட்டையின்
நெற்றிக்கண்மறைந்து

பஸ் சீசன் வாங்க
பகலும் இரவும்
பசியுடன் நின்று
பாய் நெய்து...

தோளிலும் தலையிலும்
தூக்கி சுமந்து
ஓடியும் நடந்தும்
கூவி விற்று

"பாட்டா" செருப்பு
போட்டு நடந்து
பள்ளி செல்வதை
பெருமையாய்க் கருதி

உயர்தரம் சென்று
ஒழுங்காய்க் கற்று
பல்கலைக்கழகத்திற்கும்
நுழைந்து

பத்தொன்பது வயதில்
பாடம் சொல்லும்
உபாத்தியராக
வேலை தொடங்கி...

பஸ்ஸில் பாதியும்
கெம்பஸில் மீதியுமாய்
பறந்து திரிந்து
நான் வாங்கிய
பட்டம் ப...

*மூலக்குறிப்பு:*


*கல்வி மீதானதல்ல*
*எமது*
*கல்வி முறை மீதான கோபம்.*
*பட்டமளிப்பு*
*நாளன்று*
*பதியம் போட்ட வரிகள்.*
*இது ஒருவகையில்*
*இதுவரை நான்.*
*(௨001 ஐப்பசி)*

# தேசமே திரும்பிப்பார்

தேசமே

எங்கள் மீது

நேசமில்லையா?



ஏன் எம்மை

ஏற்க மறுக்கிறாய்?

நாங்கள் உன்னை

தூக்கிவிடுகிறோம்

ஏன் எங்களை

தூக்கி எறிகிறாய்?

எங்களுக்குக் கொடுக்க

எண்ணவும் மறக்கிறாய்.

கொடுத்தாலும்

ஏனதை

எண்ணியே கொடுக்கிறாய்?

எழுதியும் வைக்கிறாய்?

நாங்கள்
நாட்டின் பிரஜைகள்
என்பதைக்கூட
எழுதியே ஏற்கிறாய்.

விகிதாசார முறையிலும்
சரி விகிதம்
எமக்கில்லை
இது என்ன விதி?
இது சதி!

முறையிடச் சென்றோம்
அதற்கு ஆபிசின்
முன்வாசலில்
அனுமதியில்லையாம்
சன்னல் வழியாகவும்
சத்தமாய் சொல்லமுடியவில்லை
முணுமுணுத்தோம்
முணுமுணுக்கிறோம்...

தேசங்களுக்கெல்லாம்
தேநீர் தந்தோம்
தெவிட்டுப் பெயர்களில்.
எங்கள் தேநீரின் பெயரோ
"லேபர் டஸ்ட்".

நாடே!
நாங்கள் மலையேறி
பொருள் தேடாதபோது
உன் பாதீடு*
துண்டு விழும் தொகையால்
துவண்டு விழாதோ!?

நன்றி கெட்ட நாடே!
உருக்கமாக ஒன்று சொல்கிறோம்
உன் டயறியில் குறித்துக்கொள்!

எம்மை நீ
ஏறெடுத்துப் பார்க்காதவரை

*பாதீடு – வரவு செலவுத் திட்டம்

உன் பொருளாதார ஏடு

நிரப்பப் படாமலேயே இருக்கும்.

நீ பாத்திரத்துக்கு பதில்

பத்திரம் ஏந்தி நிற்பாய்

பிச்சைக்காக!

இது எங்களது


கண்டனக்குரல்!

கண்ணீர்க்குரல்!

நன்றி சிகரம் மலையக தமிழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு வெளியீடு.

பேராதனைப் பல்கலைக்கழகம்.

# தொலைபேசி



உலகத்தைச் சுருக்கிவிட்ட
உன்னதம் நீ.
உன் கழுத்தில் மட்டும்
எந்நாளும்
சுருக்கு.

"கிரஹாம் பெல்"
இன்று
இருந்திருந்தால்
உனை வைத்து
கிரகங்களையே
இணைத்திருப்பான்.

உனது குரல்
ஓர் நாளில்
அலறல்
பின்னோர் நாளில்
அதிரல்
சில காலம்
சிரித்தவள் நீ
இப்போதோ
சிணுங்குகிறாய்.
சிந்தும் இசைக்கிறாய்.

இன்றைய
ஒலிபரப்புக்களில்
உன் மணியடித்தால்
இசை ஒலிக்கிறது.

இன்றைய திரைக்காதல்
காவியங்களில்
கதாபாத்திரம் நீ.
சில வேளை
கதாநாயகியே நீ.

வீட்டுக்கு வீடு
மட்டும் நீ
விருந்தாளியாயிருந்தபோது
உனக்கு அந்தஸ்து
உச்சம் - பின்
செல்வந்தர்
கைகளில் மட்டும்
"செலூலர்" ஆனாய்.
இப்போது
வீதியோரப்
பெட்டிகளில்
விபசாரியானாய்.
பலரின்
சில்லறை வருடலில்

அடிக்கடி - உன்மடி
கனமானாய்.
காசு பிரசவிக்கும்
கருவறை
உனக்கு மட்டும் தான்.
காதலர்கள்
வாழும் வரை
உன் உழைப்பு
காமதேனுதான்.
உன்பொத்தான்களைத்
தட்டித் தட்டி
எங்கள்
காதலர்களின்
சுட்டு விரல்கள்
சூடான விரல்களானது.

எங்கள் வளாகத்து
தேர்தலில்
வாக்குறுதியின்
குறியீடாகவும்
வாக்குகளுக்காய்
பலிக்கடாவாகவும்
நீ!

நீ

விஞ்ஞானிக்கு கண்டுபிடிப்பு

வியாபாரிக்கு வருமானம்

தொழிநுட்பத்தில் விருத்தி

தொழிலாளிக்கு கனவு

கலைஞனுக்கு கருவி

கொலைஞனுக்கு ஆயுதம்

காதலர்க்கு பாலம்

என் கவிதைக்குக்


கரு.

*மூலக்குறிப்பு:*

*பல்கலைக்கழக வளவிற்குள்*
*வந்து விட்டது ஒரு*
*சில்லறைத் தொலைபேசி*
*அது அவ்வருட மாணவர் சபை தேர்தலில்*
*அதிக வாக்கு வாங்கும்*
*அமைப்பை தீர்மானிக்கும்*
*காரணியாகிவிட*
*பல்கலைக்கழக சுவரை*
*அலங்கரிக்கும்*
*காரணியாகிவிட்டது இந்த*
*கவிதை.*

*நன்றி – "தமிழோவியம்" (சுவர்ப்பத்திரிகை) முகாமைத்துவ பீடம்.*
*கொழும்பு பல்கலைக்கழகம். 1998*

# கூடைப் புராணம்



பொட்டைக் கழுதையின்னு
பேரெடுத்து
பிறந்தவ நான்
சட்டை போட்டு
அழகு பார்த்து
வளர்ந்ததில்ல
இந்த தேகம்
பட்டாம் பூச்சி
காலமெல்லாம்
பசியில் ஏங்கி
காத்திருந்தேன்.

பிள்ளை மடுவமே
என் பேர்கேட்ட
முதல் எ(இ)டம்
அதுவரைக்கும்
"பரட்டை" என்றும்
"மொட்டை" என்றும்
பட்டப் பெயர் தானே
என் நெறம்.

பாதிச்சுவர் மறித்த
கொட்டகைதான்
எனக்கு பள்ளிக்கூடம்.
அங்க
வாத்தியாரின்
தோட்டத்தில
வாழமரத்திற்கு
தண்ணீவார்த்தேன்.
சட்டி பானை
பத்து தேச்சு
சகலதையும்
சுத்தம் செய்தேன்.

அந்த அனுபவ
அறிவினாலே
'ஐயாவு' மாமன்
என்னை
கொழும்புக்குக்
கூட்டிபோச்சு
அங்க
நோனாவும்

மாத்தையாவும்
நூறு (ஐ)அம்பது
கொடுப்பாக
எனக்கில்ல
மாமனுக்கு.

மாத்தயாவின்
மகனுக்கு
காலு சட்டை
கழுவுறதும்
‘காலு’ கழுவுறதும்
காத்தால ஆரம்பிச்சா
அந்தி மசங்கும் வர - என்னை
அரைச்சு எடுத்துருவாக.
எனக்கே தெரியாம
எனக்குள்ள
ஒரு மாற்றம்.
எனக்கிருந்த
அறிவைவச்சு
எப்படியோ கண்டுபிடிச்சு - நான்
பெரியவளா ஆயிட்டேன்னு
பெரிய நோனாகிட்ட
சொல்லிவச்சேன்.

வெளிய சொல்லக்
கூடாதுன்னு - நோனா
வௌக்குமாத்த
நீட்டினாக.
வெவரம் சொல்ல
ஆளில்லாம
நான் வேலை செஞ்சு
நாள் கழிச்சேன்.

நோனா இல்லாத
நேரம் - மாத்தையா என்னை
நோட்டம் விட்டு
பார்த்தாரு
வெளக்குமாறு
கையிலெடுத்து - நான்
வெளக்கம் சொல்ல
வேண்டியதாச்சு.

எனக்கு தெரிஞ்ச
எழுத்தினாலே
எழுதிப்போட்டேன்
லெட்டர் ஒன்னு.
என் ஆத்தா பதறிவந்து
என்னை அழைச்சு
போச்சு
தோட்டத்துக்கு.
அங்க
பட்டுப் பாவாடை
சரிகை கட்டி - எனக்கு
சடங்கு வைக்க நாதியில்ல.
*படங்கையும் சீட்டையும்
கட்டி
பெரியபுள்ள ஆனவள
பேர் பதிஞ்சு
விட்டுட்டாக.

*கொழுந்தெடுக்கும் போது இடுப்பில் அணிதல்

கங்காணி மாமன்
தொடங்கி
கணக்குப்புள்ள ஐயாவரை
கடைக்கண்ணால - என்னை
கவனிச்சு பார்த்தாக.

வெவரம்
வெவகாரம் ஆகுமுன்ன
வீட்டுல எனக்கு
விவாகம் பண்ணி
வச்சிட்டாக.
எம்பாடு பெரும்பாடு
என் சந்ததிக்கு
வேணாமுனு
ஆசை கனவையெல்லாம்
அள்ளிவச்சேன் மனசுக்குள்ள.

பத்துமாசம்
நான் சொமந்து
பெத்துகிட்டேன்
புள்ள ஒன்னு
அதுக்கு தொன வேணுமின்னு
அடுத்த கருவையும் நான்
அணைச்சுக்கிட்டேன்
வயித்துக்குள்ள.

அம்மாமாரையெல்லாம்
ஆசுபத்திரி வரச்சொல்லி
தோட்டத்து லொறியில
எங்கள தொங்க வச்சு
இழுத்தாக

மயக்கம் தெளிஞ்சு நான்
வெளக்கம் கேக்கையில் - என்
கருவை கலைச்சிட்டாக
கனவையும் கலைச்சிட்டாக - என்
கருவறையை வெட்டி
கல்லறையா மாத்திட்டாக.

இந்தக் கொடுமை கேக்க
யாருமில்ல - என்ன
கொண்டு சேர்க்க
நாதியல்ல - இந்த
கூடைக்காரி கொழுந்தோ
(உ)ஒலக சந்தையில...

*மூலக்குறிப்பு:*

*வானொலி நிகழ்ச்சியொன்றுக்காய்*
*தொடர்ந்து துயருறுதல்*
*தொடர்பாக*
*கவிபடிக்குமாறு கேட்டபோது*
*மலையகப் பெண்கள் முன்னே*
*வேறொன்றும்*
*துன்பமாய் தெரியவில்லை*
*எனக்கு*

*நன்றி – கவிராத்திரி – சூரியன் F.M*
*தினக்குரல் – மகளிர் தின சிறப்பிதழ்*
*2003*

# கவி(ஞ)ன்



என்றுமே இல்லாதவாறு

எனக்குள்

ஓர் பரபரப்பு

இத்தனை

கவிதைகள்

பிரசவித்த நான்

இதை

எழுத மட்டும்

ஏனோ

பரபரப்பானேன்

இங்கே

போட்டியில்லை;

போட்டேயாகவேண்டுமென

தலைப்பு

தரப்படவில்லை

காலை எட்டுமுதல

வெயிலில் காய்கிறேன்

ஆனால்

காய்ந்துவிடவில்லை.

நிற்கிறேன், நடக்கிறேன்

கால்கள்

ஓய்ந்துவிடவில்லை.

மூன்று

வேளையும்

முறையாக சாப்பிடவில்லை

ஆனால்

பசிக்கவுமில்லை.

வாசித்துப் பார்க்கிறேன்

வரிகள் எல்லாம்

தலைப்பாகவே

தெரிகிறது.

இரத்த ஓட்டம்

இரட்டிப்பானதாய் ஓர்

உணர்வு.

என்னைக்

கடந்து போவார் எல்லாம்

காரணமின்றி

புன்னகைக்கிறார்கள்.

பதிலுக்கு

புன்னகைத்துவிட்டு

கவிதையிலே

கனவுகாண்கிறேன்.

என்னை ஓர்

அறைக்குள்

அழைத்துச் செல்கிறார்கள்.

அங்கே,

என்னவள் வலியில்

என் கவிதை வழியில்

மீண்டும் நான் வெளியில்...

இரவு எட்டரை

என் கவிதையை - இன்று

என்னவள் பிரசவிக்கிறாள்.

என்னை மறந்தோடி

தலையில் முத்தமிட்டு

தலைப்பிடுகிறேன்

என் கவிக்கு

-தி. கவின்-

மூலக்குறிப்பு:

என்

மூத்த மகனோடு

முண்டியடித்துக் கொண்டு

மண்ணில் வீழுந்த


வரிகள்.

02 – 11 – 2003


கண்டி நர்சிங் ஹோம்

# எயிட்ஸ்

இழுத்துக்கட்டிய
வீணையாக அவள்
மீட்டத்துடிக்கும்
மிடுக்கான என்
விரல்கள்
மீட்டினேன் - என்
இலட்சியத்தை
ஈட்டினேன்
வீணையின் தந்திகள்
அறுந்திருந்தன
என் விரல்களில்
விழுப்புண்



# மேற்கில் உதிக்கும் சூரியன்கள்



**எ**ன் நினைவுக்குள் வருபவை...

கொழும்பு
　　கட்டடக்காடு
ஹட்டன்
　　மலைகளின் நாடு
மட்டக்களப்பு
　　மீன்பாடும் தேனாடு
மன்னார்
　　நல்ல மீன், கருவாடு
மஸ்கெலியா
　　தேயிலை
மருதனார்மடம்
　　புகையிலை

நுவரெலியா
    பூஞ்சோலை
பொரளை
    மலர்ச்சாலை
காலி
    நெடுஞ்சாலை
களுத்துறை
    சிறைச்சாலை

கல்வி பற்றியும்
கலைகள் பற்றியும்
சிந்திக்க வேண்டிய - எங்கள்
சிறுசுகளை
யுத்தம் பற்றியும்
இரத்தம் பற்றியும்
சிந்திக்க வைத்த
சிறைச்சாலையே...

பால் மனம் மாறா - எங்கள்
பாலகனின் கவி வரிகளில்
இரத்த வாடை
வீசுகிறது

நீ நினைவில்
வைத்துக்கொள்
உன் அட்டூழியங்களுக்கும்
அடாவடித்தனங்களுக்கும்
அக்கிரமங்களுக்கும்

ஆக்கிரமிப்புகளுக்கும்
நேரெதிராய்
இங்கே கலாசாலைகளும்
கல்விச் சாலைகளும்
நிமிர்கின்றன


இவர்கள் புறப்புடுவதை யாராலும்
அப்புறப்படுத்திவிட முடியாது
விடியலுக்காகப் பாடி
விடுதலை தேடும்
இவர்கள்
மேற்கில் உதித்துவிட்ட
சூரியன்கள்...

*மூலக்குறிப்பு:*

*மேல் மாகாணம்*
*களுத்துறை மாவட்டம்*
*மத்துகம K.V.S. கல்வியகத்தில்*
*என்னுடைய மாணவர் ஒருவர்*
*ஆசிரியராகவிருந்தார்.*
*அவரது அன்பு அழைப்பினையேற்று*
*அங்கு நடந்த பரிசளிப்பு*
*விழாவிற்கு சென்ற போது*
*அங்கு கல்வி கற்கும் சூரிய குஞ்சுகளின்*
*கவியரங்கிற்கு*
*தலைமைவகித்து வடித்த கவிதை*
*அவர்களின் பாடுபொருள் யுத்தமும் இரத்தமுமாக இருந்தது.*
*2001*

*நன்றி – இரத்தினஜோதி*

# பிரிவு



உலகம்
ஒன்றென்கிறார்கள்...

கோளத்தை
கண்டங்களாகப் பிரித்து
கண்டங்களை
நாடுகளாகப் பிரித்து
நாடுகளை
நகரங்களாகப் பிரித்து
நகரங்களை
தெருக்களாகப் பிரித்து
தெருக்களை
சாதிகளால் பிரித்து

மனிதர்களை
மதங்களால் பிரித்து
வண்ணங்களை
நிறங்களாகப் பிரித்து
வடிவங்களை
உருவங்களாகப் பிரித்து
உலகமயமாதல் - என
ஒட்டவைத்திங்கே
உலகம்
ஒன்றென்கிறார்கள்...

கண்டங்கள்
ஒன்றோடொன்று
ஒட்டிப் பிறந்தனவென்றே
அடித்துச் சொன்னார்
அல்பிரட் வெக்னர்
இன்று
தொழிநுட்பத்தால்
கண்டங்களை
ஒட்டவைப்பதற்கும்
சாத்தியமுண்டு - அங்கே
சாதிகள்
ஒன்றில்லை என
பிரிந்து போவார்கள்
மனிதர்கள்...

மனிதன் குடும்பமாகி
குடும்பங்கள் சமூகமாகி
சமூகங்கள் சாதியாகி
சாதிகள்

சங்கங்களானபோது
வந்தது பிரிவு

வேதங்கள் போதனையாகி
போதனைகள் மதங்களாகி
மதங்கள் "மதம்"
கொண்டு
கட்சிகளான போது
வந்தது பிரிவு.

இல்லாதவன்
எதிர்பார்ப்புக் கொள்கையில்
இருப்பவன் கொடுக்க
மறுக்கையில்
பிரிந்து போகிறான்.

எல்லாவற்றையும்
வெல்ல நினைக்கையில்
எதிரிகள் எமை
வெல்ல நினைக்கையில்
பிரிய வைக்கிறான்.

ஒற்றுமைக்காய் பேசும்
உதடுகள் - இங்கே
இனவெறியால்
மதவெறியால்
பிரிதலுக்காய்
போர் புரியச்செய்கின்றன.

ஆசைக்காய்
அன்பைப் பிரித்து
ஆளுகைக்காய்
நாட்டைப் பிரித்து - சுய
நலத்திற்காய்
நட்பைப் பிரித்து
சொத்துக்களுக்காய்
சொந்தங்களைப் பிரித்து

சொந்தங்களுக்காய்
காதலைப் பிரித்து
காதலுக்காய்
வீட்டைப் பிரித்து
கணிதத்தில் நாம் வென்றது
பிரித்தலில் மாத்திரம் தான்.

மாம்பழத்தைக் கூட
பிரித்துண்ணக் கூடாதென்றுதானே
கடவுள் சொன்னது
நாம்தானே
கடவுளையும்
காப்பவன், அழிப்பவன்,
படைப்பவன் - என
பிரித்தே வைத்தோம்.
அவனுக்கு
கற்கோயில், மண்கோயில்,
மலைக்கோயில் - என
மதில் எழுப்பி
பிரித்து வைத்தோம்.

மசூதியும் கோயிலும்
சர்ச்சும் பன்சலையும்
இங்கே
பிரிவினையின்
குறியீடுகளாக...

மதம்
மனிதத்தைப் பிரித்தது
அகம்பாவம்
அன்பைப் பிரித்தது
ஆத்திரம்
அமைதியைப் பிரித்தது
அடிமைத்தனம்
உரிமையைப் பிரித்தது
முன்கோபம்
உண்மையைப் பிரித்தது
முதலாளித்துவம்
நீதியைப் பிரித்தது.

மனிதா உன்
புரிதலில் உள்ள குறைதல்
உனக்குள்
பிரிதலை வலிமையாக்குகிறது.
பிரிதல்
புலியைக் கூட
புல் தின்ன வைக்கிறது.

புரிந்துகொள்
அருவிகள்
ஆறுகளாய் பிரிவதைத் தவிர

மழை மேகம்
மழைத்துளியாய் பிரிவது தவிர
சமதர்மத்தின்
பங்கீட்டுப் பிரிவைத் தவிர
பிரசவத்தில் சேய்;
தாயிடம்
பிரிவது தவிர,

பிரபஞ்சத்தில்
பிற பிரிவுகளெல்லாம்
புரிதலின் குறைதலே.

மானுடமே...!
புரிதல் கொள்
பிரிதல் வேண்டாம்.

மூலக்குறிப்பு:

வானொலி
நிகழ்ச்சிவொன்றிற்காய்
பிரிவு எனும் தலைப்பு
தரப்பட்ட போது
அந்த காலகட்டம் என்னை
இப்படித்தான்
எழுதச் சொன்னது
4/5/6/7... 23.03.2004

நன்றி சூரியன் FM கவிராத்திரி

# பொட்டு

சிறுக (வி) தை

அவளை
அறியாதவர்
அரிது.

"பொட்டு"
அவளின் பெயர்
ஆனால்
பொட்டக்கா
என்பதுதான்
அவளுக்கு புகழ்.



அகராதியில் இல்லாத
அனைவருக்கும் தெரிந்த
ஆனாலும்
அரிதாக பயன்படுத்துகின்ற
இடக்கரடக்கலாய்
"இங்கிலீசு" என்றும்
செந்தமிழ் என்றும்
செப்புகின்ற தமிழே
அவள் மொழி...

அதனால் அவளைப்
பைத்தியம் என்றே
பலரும் அழைத்தனர்
ஊரும்
ஓர் சிறுவனும் கூட.

உணவுக்காய்
ஊர் முழுவதும்
சுற்றி வருவாள்.
ஒரு சந்தியில் நின்று
ஓர் திசை பார்த்து
உரக்கப் பேசுவாள்.
அப்போதெல்லாம்
அரேபியப் பாணி
தண்டனையாய் - அவள்
கல்லெறிந்து
கலைக்கப்படுவாள்;
காரணம்
அவள் மொழி...

பொட்டக்காவின்
கணவர் ஒரு
காந்தியவாதி
நித்தம்
சத்தியசோதனையில்
லயித்திருப்பார் -
ஓர் சிறுவன் - அதை
ரசித்திருப்பான்.

பிள்ளைகள்
பெயரெல்லாம்
பாரத சுதந்திரத்தை
பறைசாற்றும்
(காந்தி, சுந்தரம், மோகன்தாஸ்)
அதனால்
காந்தியவாதி மட்டுமல்ல
இந்தியவாதி
என்பதுமுண்மை.

இலங்கை வந்த
இந்திய வம்சாவளியினர்
தாயகம் திரும்ப
தங்கள் விண்ணப்பங்களை
சேர்த்துக்கொண்டிருந்தார்கள்.
காந்திய வாதி
கடவுச்சீட்டுப் பெற்றதில்
கடுகளவும்
ஆச்சரியமில்லை...

"இந்திய பெட்டிகள்"*
அடிக்கும் சத்தம்
எல்லோர் வீடுகளிலும்
கேட்கும்
பெட்டியில் பெயர்
எழுதும் அழகை
ரசித்திருப்பான்
ஓர் சிறுவன்.

*தாயகம் திரும்பும் போது தமது உடமைகளை கொண்டு செல்லும் பெட்டி

கப்பல் ஏறும்
நாள்வர
காந்திய குடும்பம்
ஊரார் வீடு
ஒவ்வொன்றுக்கும் போய்
பயணம் சொல்லி
வந்தார்கள்.
எல்லோர் முகத்திலும்
ஏக்கம்.
ஊரைப்பிரிந்து
போகிறார்களாம்.
வாசல் நிறைய
சனக்கூட்டம்
வழியனுப்ப
வந்திருந்தார்கள்.
ஊரில் ஒவ்வொரு நாளும்
புத்தகம் படித்த ஒரே ஒருவரும்
இன்று விடைபெறுகிறார்
என சிறுவனுக்கு
ஒரு வருத்தம்.

“பொடிமெனிக்கா
பொல்காவலையூடாக
மஹோ சென்று - தலை
மன்னாரை அடையவேண்டும்,
அங்கே
இராமானுஜம் கப்பலில்
மண்டபம் சேர்ந்துவிட்டால்
நிம்மதி”

பக்கத்தில் நின்ற
பெரியவர் சொன்ன
பயணப்பட்டியலை
கவனமாக காதில்
வாங்கிக் கொள்கிறான்
சிறுவன்
இந்தியா செல்வதென்றால்
இதுதான் வழியோ?...
யூகித்துக் கொள்கிறான்.

பொடிமெனிக்கா
இதோ வருகிறேன் - என
எங்கிருந்தோ
ஒரு ஊ.... ஊ.... வைத் தர
இங்கே ஓ... வென்று
ஊரார் அழுக,
பொடிமெனிக்காவின்
வேகத்தையும் தாண்டி வந்து
பேரலறலுடன்
கண்ணீர்... கதறலுடன்
பொட்டக்கா கலங்கிப்போய்
பொடியாய் கிடந்தாள்...
பிளாட்போமில்.

கூட்டம்... கூச்சல்...
அவளின் பிடி
இரயிலுக்கு
நங்கூரமிடப்பட்டிருந்தது.

"நான் பெத்த புள்ளைகளா
என்ன உட்டுட்டு
போறீங்களா"?????
பொட்டக்காவின்
கண்ணீர் கட்டளைகேட்டு
பொடிமெனிக்கா
போக மறுக்கிறாள்.
தாய்ப்பாசம் கண்டு
இரயில் பாதையின்
இரும்பு இளகியது
இயந்திரம் இயக்குபவர்
மந்திரம் பட்டவராய்
கண்ணீர் சுரக்கிறார்
காரணம் புரியாமல்
ஒரு சிறுவனும்
கண்ணீர் விட்டு
கதறுகிறான் - அவனுக்கு
ஒன்று மட்டும்
உறுதியாய் தெரிந்தது
பொட்டக்கா - இப்போ
பைத்தியமில்லை.

புகையிரத நிலையம்
போர்க்களமாய் காட்சி தந்தது
அவள் ரயிலில் ஏறுகிறாள்

உள்ளேயிருந்து

ஓர் கூட்டம்

வெளியே தள்ளுகிறது

டிக்கட் இல்லாதவர்களையே

ஏற்றிக்கொள்ளாத இரயில்

பாஸ்போட்டில்லாத

பொட்டக்காவையா

ஏற்றுக்கொள்ளும் ?

உணவுக்காய் ஊர் சுற்றியவள் - இன்று

உணர்வுக்காய் போர் புரிந்தாள்.

ஆனால்

பலமிக்க ஆண்கள்

பலரின் பிடியில்

அந்த தாய்மை தோற்றுவிட்டது...

ரயில் புறப்பட்டது

இப்போது கேட்டது

ஊ... ஊ... என்ற

ரயிலோசையைவிட

"நான் பெத்த புள்ளைகளா

என்ன உட்டுட்டு

போறீங்களா"????? - என்ற

தாயோசை...

அந்த தாய்

இந்த நாட்டில்

வாழ்வை முடித்துக் கொண்டுவிட்டாள்

சித்த சுயாதீனத்துடன்...

காந்தீய குடும்பம் - இன்றும்

அவர்களின்

தாய் நாட்டில்


வாழ்ந்துகொண்டிருக்கலாம்

சித்த சுயாதீ-----------?

மூலக்குறிப்பு:

இந்தக் க(வி)தையில்
வரும் க(வி)தா பாத்திரங்கள்
சம்பவங்கள்
யாவும் கற்பனையே அல்ல
உங்களுக்கு க(வி)தை சொன்ன
சிறுவன் உட்பட
நிகழ்வாண்டு (1980)
நினைவில் மீண்டு
க(வி)தையாக
2001. ல்

# எண்கணித சோதிடம்




*1*ம் தேதி!
புது கூடை வாங்கி
பொலி போட்டு
ஆரம்பிக்க
இரண்டாம் நம்பர்தான்
ராசியான ம(லை)ல.

மூனாம் நம்பர்
முழுசும் பச்சக்காடு
பச்சப்பசேலுனு
வளர்ந்து நிற்கும்
நாலாம் நம்பர் ம(லை)லயில
நாலு புடி போட்டாலே
*தட்டு நிறைஞ்சிடும்.

*தராசு

அஞ்சாம் நம்பருல

ஆஞ்சநேரு** சாமி கோயில்

ஆறாம் நம்பர்

அருகுக் காடு

அப்படியே மாட்டுக்கு - ஒரு

கட்டோட வந்திடுவோம்.

ஏழாம் நம்பரும்

எட்டாம் நம்பரும் - நமக்கு

எட்டாத

ஒ(உ)சரத்திற்கு

வளர்ந்து நிக்கும்

கூடையே ஓரம் வச்சு.

*கொங்கானியில

கொழுந்தெடுத்தா

கங்காணி

கத்துவாரு.

*கொங்கானி – கூடைக்கயிறு அழுத்தத்தைக் குறைக்க தலையில் போடும் துணி

*மிளாரு – தேயிலை இலை கொட்டிய விறகு

ஒன்பதாம் நம்பர்

ஒன்னுக்கும்

ஒ(உ)தவாத

கல்லுக்காடு

பத்தாம் நம்பருல

பத்தினியம்மா** கோயில்

பதினொன்னு

கவ்வாத்து மலை

கழிச்ச விறகும்

*மிளாருமா; காடே

கறுப்பா கிடக்கும்

மட்டம் வெட்ட

தொடங்கினாதான் - அங்க

மடிநெறைய

கொழுந்துவரும்.

பன்னிரண்டுல

முனியாண்டி** கோயில்

பதிமூனுல மாடசாமி**

பதினாலுல ரோத முனி**

பதினஞ்சில சிண்டாகட்டி

பதினாறாம் நம்பர்

வனத்து சின்னப்பர்**

பதினேழுல

வண்ணாங்காணு****

பதினெட்டுல

தண்ணீட(த)ாங்கி

பத்தொன்பதுல

ஊத்துப் பீலி

இருபதாம் நம்பரோட

இருக்கிறதுதான்

தொர**** பங்களா

இருபத்தொன்னுல

பெரிய ஆபீசு

இருபத்திரண்டுதான்

எங்களுக்கு 'கக்கூசு'

இருபத்தி மூனுல

ஆசுபத்திரி

இருபத்தினாலு பக்கத்திலே

இஸ்டோரு*****

** தெய்வங்களின் பெயர்கள்

*** வண்ணான் துவைக்குமிடம்

**** தோட்ட முகாமையாளர்

***** தேயிலை தொழிற்சாலை

இருபத்தைஞ்சாம் நம்பர்
பள்ளத்துல ஒரே சேறு
இருபத்தாறுல
நாங்க குளிக்கிற ஆறு...
இருபத்தேழுலதான்
எங்கள கொண்டுபோய்
சேர்க்கும் இடுகாடு

இப்படி
எடுத்த எடுப்புக்கெல்லாம்
எங்க வாழ்க்கையே
நம்பரோட
என்னவோ?
எண்கணித சோதிடமாமே
அதுல
எந்த நம்பருங்க
எங்களுக்கு நல்லது?

மூலக்குறிப்பு:

*எண்கணித சோதிடத்தையும்*
*என் மக்களையும்*
*ஒப்பு நோக்கிய போது*
*என் மக்கள் கேட்கும்*
*கேள்வி இது*

# ஆச்சி



சிரம் மேல்

கரம் கூப்பி கும்பிட்டு

திக்கெட்டும்

திரும்பி நின்று

தெய்வம் தொழுது - என்

தேக நலன் வேண்டி

திருநீறு பூசிவிடும்

என் ஆச்சி...

எத்தனை பேர்தான் - உனக்கு
சேலை வாங்கித் தரட்டும்
என் கைப்பட தந்ததுதான்
பொன்னாடை யென்று
புகழ்வாய்...

என் பேரன் பட்டதாரி
என எல்லோரிடத்திலும்
எப்படியெல்லாம் சொல்லி
மகிழ்வாய்...

பாசமலர் படக்கதையை - நீ
சொல்லும் அழகை - நான்
நேசிப்பவரிடத்தில் எல்லாம்
சொல்லி
நெகிழ்வதுண்டு...

ஔவையின் அழகை
அழகு தமிழின் ஒலியை - உன்
மிடுக்கான நடையை - இன்றும்
மீட்டிப்பார்க்கிறேன்...

'திலகம்' என்று நீ
தெளிவாக உச்சரிக்கும்
தீந்தமிழ் கேட்க
தேம்புது நெஞ்சு.
இன்று உனை
காலன் வென்றிருக்கலாம் - ஆனால்


ஏன் ஆச்சி நீ
காலத்தை வென்றவள்.

தலைமுறைகள் கடந்தவள்
தன் தலைமுறை
வித்தொன்றை - தேச
விடிவுக்காய்
விதைத்தவள்.

சென்று வா ஆச்சி
நீ கூட இன்றிங்கே
புதைக்கப்படவில்லை;
விதைக்கப்படுகிறாய்.
உன்
பேரனின்
பேனையால்
கவிதையாய்...

மூலக்குறிப்பு:
ஓர்
வீரமகளின்
அம்மம்மா
என்
அப்பம்மா
ஆச்சி
வேலம்மாள்
மண்ணில்
விதைக்கப்பட்ட போது
மலர்ந்த வரிகள்
17/6/2006

# என் அன்பின் ஆசானுக்கு...



ஆசானே!

என் அத்திவாரத்தை
அகலப்படுத்தியவரே
என் கல்வியில்
முதல் மூன்று வருடங்களும்
சிங்கள மொழியில்
சிக்குண்டு
சிறு வயதிலேயே இனவாத
சீண்டலுக்கு ஆளான என்னை
செந்தமிழ் மொழி மூலம்
கல்வியில் சிறகடிக்கச்
செய்தவரே...

வறுமையின் பிடியில் நான்
வாடி நின்ற போது
ஓடி வந்து உதவுவீரே!
என் தந்தை தொழில் செய்து
பணம் அனுப்ப தாமதித்த
போதெல்லாம்
என் வயிற்றுக்கு
பால் வார்த்தது நீங்களல்லோ...
நீங்கள் தரும்
கால் இறாத்தல் பாணும் கறியும்,
தேனும் பாலுமாய்
தித்திக்கின்றது
என் நாவில் இன்றும்.

உங்கள் ஒவ்வோர்
பார்வையிலும்
ஒவ்வொன்றை கற்றேன்
நீங்கள் கோபத்தில்
உதிர்க்கும்

*'Be Careful'*

கவனமாயிரு என எனக்கு

கட்டளையிடுகின்றது இன்றும்.

நான் உங்களை விலகி

யாழ்ப்பாணத்தில்

கற்றபோது கூட

பாடத்தை விட அதிகம்

படித்தது உங்கள்

கடிதத்தைத்தான்.

ஆங்கிலமும் தமிழும் எனக்கு

அள்ளித்தந்த அந்த

ஸ்ரீ கிருஸ்ணா அறநெறி

இன்றும்

அறிவாலயமாய் தெரிகிறது

எனக்கு.

என்னை

மாணவனாய், நடிகனாய்

மாற்றியது அந்த மையந்தான்.

என் முதல் மேடைப் பேச்சு

என் முதல் நாடகம்

என் முதல் கவிதை

என் முதல் பாட்டு

என் முதல் விளையாட்டு

என் முதல் நீளக்காற்சட்டை

எல்லாவற்றினதும்

அரங்கேற்றம் - இந்த

அறநெறிக் குடிலில்தான்.

காலம் மாறியிருக்கின்றது

என் கஷ்டங்கள் மாறியிருக்கின்றன

மாறாமலிருப்பது;

நீங்களும்

அந்தக் குடிலும் - அதே உங்கள்

அர்ப்பணிப்பான சேவையுந்தான்...

எனக்கு தெரியும்

நான் தரும் பொன்னிற பரிசு ஒன்றும்

என் நன்றிக்கடன் தீர்க்க போதாது

என்று...

நான் பொன்னே கொடுத்தாலும்

போதாது என்று...

என்றாலும் இந்த

அவையில் உங்கள்

பெருமைதனை அறிவிப்பேன்...

பொறுத்திருந்து

பொருள் தேடும் காலத்தில்

இந்த அறநெறிக்கு அள்ளித்தருவேன்.

நான் அன்று பட்டினியில்

நின்ற போது

நீங்கள் - என்

குழந்தை என்று

உச்சரித்து உபசரிப்பீர்களே!

இன்று பட்டதாரியாய்

நிற்கும் போதும்

உங்கள் குழந்தை என்றே

உச்சரிக்கிறேன்

உச்சரிப்பேன்.

*மூலக்குறிப்பு.*

*எமது லோயல் கல்வியக 10வது ஆண்டு விழாவில்*


*சிறப்பு விருது பெறும் எனது ஆரம்ப கல்வி*

*ஆசான், வட்கொடை ஸ்ரீ கிருஸ்ணா அறநெறி*

*பாடசாலையின் நிர்வாகி திரு. S. இராஜசேகரன்*

*அவர்களுக்கு*

# வரையப்படாத 'லைன்'கள்



நீளமாய் ஒன்று
அதனை

பத்தாகப்பிரித்து
குறுக்காகப்பார்த்தால்
முன்னே
ஆறிற்கு பத்து (அடி)
உள்ளே
பத்துக்கு பன்னிரண்டு.

ஆறிற்கு பத்து
அறைப்பகுதியில்
அரைப்பகுதி
கதவுக்குப்போக

அடுப்பு, பாத்திரம்,
அம்மி,
அமர ப(லகைக்)லாக்கட்டை
ஆறடி உயரத்திற்கு மேல்
அடுக்கி வைத்த
விறகு தாங்க
அட்டல்.

உள்ளே
அகலமாய் பத்து,
நீளமாய் பன்னிரண்டு.
கதவும்,
திறக்கும் பகுதியும்
கால் பங்கைக் கொள்ள
மீதமுள்ள முக்காலில்
அலுமாரி, ராக்கை,
அரிசி சாமான் பெட்டி,
அமர ஓரிரு
நாற்காலி.

வாளியில் தண்ணீர்
வணங்கக் கடவுள் படம்
ஓரமாய் கட்டில்
ஒரு ரேடியோ
இப்போதெல்லாம்
ஒரு டி.வி யும் கூட...

பரிமாற
பசியாற
இளைப்பாற - என
எல்லாவற்றிற்கும்
இடமொதுக்கிய பின்
இவர்களின்
உணர்ச்சி
புணர்ச்சி
அவர்களின்
அம்மா, அப்பா,
குழந்தைகள்
இடையே...

ஈ - தொழிநுட்பம்
ஈ - மெயில்
ஈ - கொமர்ஸ்
சைபர் ஸ்பேஸ்
என்றெல்லாம்
வந்துவிட்ட - இந்த
இருபத்தோராம்
நூற்றாண்டில்
இவர்களின் 'ஸ்பேஸ்'
வாழிடம் அல்லது


அழிவிடம்
அந்த
பத்துக்கு
பன்னிரண்டு.

வரிசையாக
இருப்பதால் மட்டும்
இது 'லைன்' இல்லை
உலக அரங்கில்
வரையப்படாத
இவர்களின் வாழ்க்கையும்
லைன் மட்டும்தான்.

*மூலக்குறிப்பு:*
*லயம்*
*என அழைக்கப்படும்*
*அந்த லைன் குடியிருப்பில்*
*வாழ்ந்த அனுபவம்*
*கவிதை வரிகளாக.*
*நீங்களும்*
*கவியூடே லயத்து வாழ்க்கையில்*
*ஒருமுறை லயித்திருங்கள்.*

*நன்றி: 'வடம்' கவிதை இதழ்*

# நமது கதை



**வா**னத்துச் சூரியன்

வாசலைத் தழுவுமுன்

பிரட்டுக்களத் தப்பு

எங்களை பேர் எழுத அழைக்கும்.

யாருக்கு

எந்த மலை?

என்ன வேலை? - என்று

எம்மீது

அதிகாரம்

அத்திவாரம் போட்டுவிடும்

கானு வெட்டு,

கவ்வாத்து வெட்டு,

அருகெடு,

கொழுந்தெடு,

மருந்தடி,

உரம்போடு - எனவென்

உடம்போடு

ஒட்டியது

உழைப்பு.

நாட்கூலி வேலை

நாலரைக்கு சங்கு

ஒன்னாந்தேதி பட்டினி

பத்தாம் தேதி சம்பளம்

சம்பளத்தில் தவறாமல்

சங்கத்துக்கு சந்தா

சாவுக்கு நிதி

மாவுக்கு நிதி

சீனி காணாத சாயம்

சீமை மா ரொட்டி

எட்டடி வீடு...

மகனே!

இப்படி நான்

வாழ்ந்த கதை கூற

அழிந்த கதை தெரியும்.

இப்போ

தண்ணீர் மறிப்பு என்றும்

கருக் கலைப்பு என்றும் - நீ

அழியும் கதை கூறு

வாழும் கதை புரியும்.

03.06.2005

# மீண்டும் குழந்தையாகிறேன்



இந்தக் குழந்தை
எப்போது
நினைவுகளைச் சுமக்கக்
தெரிந்து கொண்டதோ
அதெல்லாம்
அப்படியே சுமந்தபடி
கொடைக்கானல்
மலைச்சரிவின்
கொண்டை ஊசிவளைவுகள்
பதினான்கினூடே
பயணிக்கிறேன்..
மனதில் ஓர் பரபரப்பு - அது
மலைதாண்டி
கடல்தாண்டி
மடகொம்பரை நோக்கி...

வயது என்னவென
கூறிவிட முடியாத வயது
புத்தகம் தூக்கிப்
புறப்பட்டு விடுவேன்.
ஊர்க்குழந்தைகளெல்லாம்
ஒன்று சேரும் இடம் - என்
பக்கத்து வீடு
எப்போதும் - இந்த
குருவிக்கு கூடு.

அந்த நைட் ஸ்கூல் -எனக்கு
அறிவு
அய்யா, அப்பாயி
அத்தைகள் அன்பு
அத்தனையும்
கற்றுத் தந்தது.
அன்பாய் ரொட்டி தரும்
பெரிய அத்தை-பரமேஸ்
செல்லமாய் தூக்கி கொஞ்சும்
சின்னத்தை - மகேஸ்
சித்தி - லீலா
சித்தப்பா சிவஞானம்- இந்த
சிறுவனோடு விளையாட

செல்ல அத்தை திலகம்

பாப்பாத்தி அப்பாயி..

அய்யா;

அறிவும், ஆங்கில புலமையும்,

கண்டிப்பும் கலந்த

கம்பீரத் தோற்றம்.

கணக்கும் தமிழும் கூட

கற்பிப்பார்.

எனக்கு எத்தனையாம்

வகுப்பென்று

எல்லை இல்லை.

எல்லோருடனும் அமர்ந்து

புத்தகம் கிழிப்பேன்.

நைட் ஸ்கூல் முடிந்தவுடன்

நைஸாக எனைத் தூக்கி

தோளில் சுமந்து

தூங்கும் என்னை

வீடு சேர்ப்பர்.

விழித்துக்கொண்டால்

நான் சொல்வேனாம்

'அம்மா நான்

படிச்சு கிழிச்சுட்டேன்'.

அப்போது
அப்பா எங்கள் கூட இல்லை
அவருக்கு பதில்
கூடவேயிருந்தது
வறுமை.

வறுமை!
இளமையில் வருவது
கொடுமை.
இங்கே எனக்கு
குழந்தையிலேயே கொடுமை.
நான்
பாடத்திற்கு முன் கற்றது
பட்டினி!
உணவுக்காய்
காத்திருக்கவும் ....
காற்றுண்ணக்
கற்றுக் கொண்டதும்...
கல்விக்கு 'அய்யா'
அத்திவாரம் இட்டதும்...
இந்த
மடகொம்பரை
மண்ணில்.....

'சார் பழநி
படம் எடுத்துக்கலாமா'
சீதையை மீட்ட அனுமனாய்
இலங்கையிலிருந்து - எனை
இந்தியா மீட்கிறான்
டெக்ஸி டிரைவர்
'வேண்டாம் போகலாம்'
என் தெய்வம் இங்கில்லை
என்றெண்ணியபடி
'பல்லடம்' நோக்கி
பயணிக்கிறேன்....

தாராபுரம், திருப்பூர்
மேட்டுப்பாளையம்
மீண்டும்
கொண்டை ஊசி வளைவுகள்
கொண்ட மலை.

அழகு !
ஆனால் ரசிக்க முடியவில்லை.
'வண்ணச்சிறகு' - சிவானந்தம்
கவிதைகள் கையில் -ஆனால்
வாசிக்க முடியவில்லை.

அன்பு

அய்யாவைத் தேடி

அலைகிறது..

எண்பதுகளின் ஆரம்பம்

என் அய்யா

என்னைக் கட்டியணைத்து

முத்தமிட்டு

கடல் கடந்ததாய்

நினைவிருக்கிறது..

அதன்பின் -என்

கல்விக்கு

அத்திவாரமிட்ட

அறிவா 'லயம'ான

அய்யா வீடு

அத்திவாரம்

அகற்றப்பட்டு

அலங்கோலமாய் கிடக்கிறது..

அவ்வப்போது நினைவுகளுடன்

தட்டுப்பட்ட

தடயங்களை

தடவிக்கொண்டு நிற்பேன்.

இந்த ஊர்

எனக்கினி

சரிபட்டு வராது

என்பது போல்

எண்ணத் தொடங்கிவிட்டேன்.

அதேபோல்

எண்பத்து மூன்று

இனக்கலவரம் எமை

இடம் பெயரச் செய்கிறது.

மடகொம்பரை

மண்தரைப் பள்ளி..

எனக்கு 'அ' எழுத

ஆரம்பித்து வைத்தார்கள்.

நான் '∴' வரை

எழுதி விட்டு நின்றேன்.

அதிபர் கோபிநாத்

அண்ணாந்து பார்த்தார்.

என் முதல்குரு

அய்யாதான்

என்பதில்

இப்போதும்

இரண்டு கருத்தில்லை
எனக்கு.

வட்டகொடை
சிங்களப்பள்ளி,
தமிழ்ப் பள்ளி,
கிளிநொச்சி சென் திரேசா,
பூண்டுலோயா த.ம.வி
ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி
கொழும்பு பல்கலைக்கழகம்-இலங்கை
திறந்த பல்கலைக்கழகம்- என
இந்த குருவி- பள்ளி
கூடங்களுக்கு
பறந்து திரிந்து இன்று
பட்டதாரியாய் நின்றாலும்
என்முதல் குருநாதர்
அய்யாதான் என்பதில்
இப்போதும்
இரண்டு கருத்தில்லை
எனக்கு....

நீலகிரி
மலைத்தொடர்கள் -எனை

நினைவிலிருந்து
மீட்கிறது....
எனக்கு
அறிவுப்பால் ஊட்டி
வளர்த்தவர்- ஊட்டி
எனும்
இப்பெரும் ஊரில்
எங்கிருப்பார்

'குன்னூர்' குளிர்
கொஞ்சமாய் எனைத்தழுவ
என்னூர் வந்தது போல்
எனக்குள் ஓர் சிலிர்ப்பு.
என் கண்களை அகல
விழித்துக்கொள்கிறேன்
யாரிடமும்
விசாரிக்கவில்லை
ஆட்டோவில் ஏறியமர்ந்து
விஜய நகர் என்றேன் - ஆட்டோ
விரைந்து நகர்ந்தது

எத்தனை நாள் கனவு....
என் குருநாதர் எங்கிருப்பார் ?

ஏக்கம், ஆர்வம்,
துக்கம், துடிப்பு- இந்த
உளநிலை சொல்வதற்கு
உளவியலில் சொல்லில்லை

அங்கே ஓர் உருவம்-
உள்ளம் படபடக்கிறது
அய்யாவாகத்தானிருக்குமோ!?
'ஆட்டோவை நிறுத்தப்பா'
கட்டளையிட்டேன்.

'நீங்கள்
மேகராஜா தானே?'
கேட்டேன்.
'ஆமாம்
நீங்கள் யார்?'
வினா எழுப்பினார்.
'அய்யா, நான்
திலகராஜா'
அடையாளம் சொன்னேன்.
என் தங்கமே
எப்படிடா வந்து சேர்ந்த?
அப்படியே எனைக்கட்டி
அணைத்துக் கொள்கிறார்.


எங்கள் கண்களில்
ஆனந்தக் கண்ணீர்- இந்த
துளிகளுக்காகவா -எல்லாத்
துன்பங்களிலும்
கற்றுத் தெளிந்தேன்.
அய்யா மேகராஜா
அருகே அமர
புறப்பட்டேன் - இப்போது
ஆட்டோ தொட்டிலாகிறது -நான்
மீண்டும்
குழந்தையாகிறேன்...

04 – 03.2005

என் வாழ்நாள் பயணத்தில்
இலட்சியம் ஒன்று நிறைவேற
ஆனந்தக் கண்ணீருடன்
அமர்ந்து
எழுதிய வரிகள்...

04.03.2005

# ஒப்பந்தம்



இங்கே
இரண்டு
ஒப்பந்தம்.

இதற்கு முன்னும் பல
ஒப்பந்தம்;
இருந்ததென்னவோ
நிர்ப்பந்தம்.

என்னதான் கேட்டாலும்
ஒப்பந்தம்.
எப்படிக் கேட்டாலும்
ஒப்பந்தம்.

வீடு கட்டவும்
ஒப்பந்தம்.
நாடு கடத்தவும்
ஒப்பந்தம்.

சண்டை நிறுத்தவும்
ஒப்பந்தம்.
சமாதானம் செய்யவும்
ஒப்பந்தம்.

நாடு கேட்டதும்
ஒப்பந்தம்.
நாடு கெட்டதும்
ஒப்பந்தம்.

இங்கே
இரண்டு
ஒப்பந்தம்.
இருப்பது என்னவோ
நிர்ப்பந்தம்.

ஒன்று
உணர்வுக்கான
ஒப்பந்தம்.
இன்னொன்று
உணவுக்காக
ஒப்பந்தம்.

ஒன்று
அடிமைக் கயிறவிழ்க்கும்
ஒப்பந்தம்.
இன்னொன்று
அடிமைத்தனம் காக்கும்
ஒப்பந்தம்.

ஒன்று
புரிந்துணர்வு
ஒப்பந்தம்.
மற்றது
ஒன்றுமே புரியாத
ஒப்பந்தம்.

ஒன்று உலகறிந்த
ஒப்பந்தம்.
மற்றது
ஒருவருமே அறியாத
ஒப்பந்தம்.

ஒன்று
உரிமை கேட்கும்
ஒப்பந்தம்.
இன்னொன்று
ஊதியம் கேட்கும்
ஒப்பந்தம்.

ஒன்று
சமபலம் காட்டும்
ஒப்பந்தம்.
மற்றது
சம்பளம் கேட்கும்
ஒப்பந்தம்.

இரண்டும்
மாடத்தில் இட்ட
கையொப்பம்.
மக்கள்
என்னவோ
தெருவில்தான்!!

மூலக்குறிப்பு:

இலங்கை
போர்நிறுத்த உடன்படிக்கையுடனும்
தோட்டத் தொழிலாளர்களின்
சம்பளத்திற்கான
கூட்டு உடன்படிக்கையுடனும்
என் பேனை
செய்து கொண்ட
ஒப்பநதம் இது...

2006 நவம்பர்

# உயிர் வலி



கதை கேளுங்கள்
கண்ணுகளா - இது
கண்ணீர் கதை
நீங்கள் அப்பப்பப்பா! - என
ஆச்சரியப்படப் போகும்
உங்கள் அப்பாவின்
கதை!
முதலில்
கண்ணீர் வரும்
பின் என் மீது
காதல் வரும்
கதை கேளுங்கள்
கண்ணுகளா கதை கேளுங்கள்....

கொழும்பு நகரில் - வசதி
குறைவேதுமின்றி
பிறந்திருக்கும்
குழந்தாயே.

கண்டி நகரில்
கவிதைக்காரன் கைக்கு வந்த
'கவின்' கலையே
என் மகனே...

கதை கேளுங்கள்
முதலில்
கண்ணீர் வரும்
பின் என் மீது
காதல் வரும்
கதை கேளுங்கள்
கண்ணுகளா கதை கேளுங்கள்....

கர்வம் கொள்வேனடா
நான்
கர்வம் கொள்வேனடா
பஞ்சத்தில் பிறந்த நான்
பஞ்சாப் மண்ணில் நிற்கிறேன் - நீ
பஞ்சு மெத்தையில்
பிறக்கிறாய்...

கர்வம் கொள்வேனடா
நான்
கர்வம் கொள்வேனடா.

அப்பம்மாவிடம் கேள்
உன்
அப்பாவின் பெயர்
என்னவென்று?
'திலகராஜா' என்பது
ஏட்டுப் பேர்தானடா
'பஞ்சராஜா' தானடா
என் வீட்டுப்பெயர்...

நாட்டுக்கே பஞ்சம்
வீட்டுக்குப்பஞ்சம் -
சோற்றுக்குப்பஞ்சம்
பாலுக்குப்பஞ்சம்
பாவி உன் அப்பன் - எனக்கு
தாய்ப்பாலுக்கே
பஞ்சத்தில்
பிறந்தவனாம்
அப்பம்மாவிடம் கேட்டுப்பார்...

ஆனால் நீ
மஞ்சத்தில்

பிறந்திருக்கிறாய்
மகனே
மஞ்சத்தில்
பிறந்திருக்கிறாய்
கர்வம் கொள்வேனடா
நான்
கர்வம் கொள்வேனடா.

வறுமையை என்னிடம் கேள்
இளமையில்;
வறுமையை என்னிடம் கேள்
வண்ணம்
வெள்ளை என்பதால் - சோறு
வடித்த கஞ்சிதான் எனக்கு
'பால'ாம் - வயிறு
கெட்டுவிடுமாதலால்
'மல்லி' தண்ணிதான் எனக்கு
மருந்தாம்
அப்பம்மாவிடம் கேட்டுப்பார்...
அப்பம்மாவிடம் கேட்டுப்பார்...

பள்ளிக்கு சென்றால்
பிசுக்கோத்து
பள்ளி முடிந்ததும்
பசி...பசி... பட்டினி

என்ன தின்னலாம்
என ஏங்கிய நாட்கள்
எத்தனையோவுண்டு
சில நாள் பட்டினி - எனக்கு
பல நாள் அனுபவம்...
கூழுக்கே வழியில்லை
பிறகெங்கே
பாலுக்குப் போவது?

இன்றுனக்கு
மஞ்சத்தில் படுக்கை
மணிக்கொரு தடவை பால்
தனியொரு பாணியில் உடை
இனிவருமா உனக்கு தடை...

இதுவெல்லாம்
எளிதில் வந்ததல்ல மகனே,
எதிரில் வந்ததுமல்ல
தேடல்.

கண்களை குவித்து
கைகள் விறைத்து
கால்களைத் தேய்த்து
உடம்பு வளைத்து - என்
உழைப்பு செய்த
தேடல்...

என்

உழைப்பின் தேடல்கள்

உனக்கு

வழிகாட்ட மட்டும்தான்

வாழ்க்கைக்கே இல்லை.

இது என் வாக்கு

வாங்கி வைத்துக்கொள்.

என்னை கல் நெஞ்சக்காரன்

என்று கட்டியங்கூறுவார்கள்

என்னை முள் நெஞ்சக்காரன்

என்று முகத்துக்கே சொல்வார்கள்

உன் அப்பா

உழைப்பாளி என்று நீ

உரத்துச் சொல்.

உழைத்து

என்னத்தைக் கண்டார்

என்பார் - நீ

உழைக்கா விட்டால் - உனைக்

காணவே மாட்டார்

கவனமாயிரு!

உழைப்பு, படிப்பு

படிப்பு, உழைப்பு

ஒரு பஞ்சப்பிறவி மகனை

மஞ்சத்தில் பிரசவிக்கும்.

நீயும் நானும்

நிதர்சனமாகிறோம்...

நீ பிறக்கும் போது

நான் கூடவே இல்லையாம் - என

கூறுவார்கள்

அதை சொல்வாரைவிட

அதிகம் அறிந்தவன் - உன்

அப்பன் என்று சொல்... நீ

அதிஸ்டக்காரன் என்று சொல்

நீ அம்மாவின்

பிரசவ வலியினால் மட்டும்

பிறந்தவனில்லை!

அருகே இல்லாததனால்

அப்பாவின் பிரசவ வலியுடனும்

பிறந்தவன் என்று

பெருமையோடு சொல்.

அந்த வலியுடன் பிறந்த

ஒரே மகன் நீ!

அந்த வலியைப் பெற்ற

ஒரே அப்பா நான்!

மூலக்குறிப்பு:

என் இரண்டாம் மகன்

பிறந்த போது

தொழில் நிமித்தம்

இந்திய பஞ்சாப் மாநிலத்தில்

நிற்கிறேன்.

தொலைபேசியில் தகவல்

வந்தவுடன்

வந்த வலியின் அனுபவம்

வரிகளாக வந்து

சேர்ந்தது

கடிதமாக வீட்டுக்கு.

# அன்புள்ள அம்மாவுக்கு



உனக்கு

ஓய்வு கொடுத்தாக வேண்டும்!

அம்மா!

உனக்கு

ஓய்வு கொடுத்தாக வேண்டும்!

என்னை சுமந்த நீ

இன்னும்

எத்தனை நாளைக்குத் தான்

எனக்காக பாரம்

சுமப்பாய்?

ஏசு சுமந்

பாவச்சிலுவையிலும்

பாரமான

கூடைச்சிலுவை

சுமக்கும் நீ

கொழுந்தெடுத்தது போதும்

உன் முதுகு

கூனல் விழுவதில்

கொஞ்சமேனும்

இஸ்டமில்லை எனக்கு.

விழுந்து, விழுந்து

படித்தது போதும்

எழுந்து உன்னை

என் கரத்தில்

ஏந்திட வேண்டும் - என்ற

என்

எண்ணத்தில்

மாற்றமில்லை.

எங்களை

மீசை முளைக்குமுன்

வாங்கிக்கொண்டு -தலையில்

வழுக்கை

விழும் வரை - இங்கேயே

வாழ்க்கை

நடாத்தச் சொல்லும்

கலாசாலை

கொள்கையிலும்

மாற்றமில்லை..

அம்மா !

எனக்காக

காலச்சுமையையும்

கொஞ்சம் தாங்கிக்கொள்.

நான்

அவசரமாய்

புறப்படுவேன்


அம்மா.

*மூலக்குறிப்பு:*

*பல்கலைக்கழக அனுமதிபெற்று*
*வந்தவுடன்*
*அம்மாவுக்கு*
*அனுப்பிவைப்பதாக எழுதிய*
*கனவு கடிதம்.*
*இன்று நனவான போது*
*நெகிழ்ந்தது*
*நெஞ்சு*

*நன்றி: "நவகாசிங்ஸனய", கொழும்பு பல்கலைக்கழக , முகாமைத்துவ பீட புதிய மாணவர் வரவேற்பு விழா மலர் 1996*

# உருமாறு



நாங்கள் மரங்கள்

நலிந்து போயிருக்கும்

மரங்கள்...

வெற்று மேனியாய்
ஒட்டிய உடம்பாய்
உருக்குலைந்த
மரங்கள்.

எமக்கு
இலையுதிர் - இலைதுளிர்
காலங்கள் இருப்பதில்லை.
எம்மீது ஒட்டும் இலைகள்
மட்டும்;
மஞ்சலில் இருந்து பச்சைக்கும்
பச்சையிலிருந்து நீலத்திற்கும்
மாறிக்கொண்டேயிருக்கும்
எமது நிரந்தர நிறம் மட்டும்
சிவப்பு!
வறுமையின் குறியீடாய்...

ஒவ்வொரு நிறமாற்றமும்
எங்கள் நிலைமாற்றத்துக்கென்றுதான்
நீதி சொல்லப்படுகின்றது.

எங்கள் வாழ்வின்

விடியலுக்கு

வியூகம் வகுப்போரின்

விவேகம்

நிறமாற்றம்;

என்ற நிலைப்பாடுதானாம்.

எங்கள் கிளைகள்

எல்லைகள் தாண்டி

வளரவிடப்படுவதில்லை - ஒரு

வட்டத்திற்குள்

சட்டம் இட்டதுபோல்

வாழ வைக்கப்படுகிறோம்.

எங்கள்

வறுமையின் நிறம்

மாறவில்லை

உரிமையின் குரலும்

ஓங்கவில்லை.

பம்மாத்துக் காட்டும்
பாசாங்குப் பாடல் மட்டும்
புரட்சி (சீ) கீதமென
அவர்களிடத்தில்
அவ்வப்போது
புறப்படும்...

எங்கள் எதிரி
எதிரில் இல்லை
எம்முதுகில்தான்
புல்லுருவியாய்...

எங்களை உறிஞ்சிக்குடிக்கும்
இந்த அட்டைகள்
உருவத்தில் பெருத்தன
நிறத்தில் கறுத்தன.

எமது பாதை
எதுவென்பதை
இந்த புல்லுருவிகள்
முந்திக் கொண்டு
முடிவுசெய்தன;
முதலீடு செய்வதால்...

எங்கள் முகவரிகளோ
அவர்களின்
முதலீட்டினால்
மூழ்கடிக்கப்பட்டன.

எமது
துளிர்விடும் அரும்புகள்
துன்பம் கொடுத்து
கிள்ளப்பட்டன.
எமது பிஞ்சுகள்
பூக்களாகவே
நசுக்கப்படுகின்றன...

எங்கள் எதிரி
எதிரில் இல்லை
எம்முதுகில்தான்
புல்லுருவியாய்...

இந்த மரங்கள்
இனியும்
இலை வளர்ப்பதும்
கிளை விடுவதும்
எதார்த்தமாயிராது
கோடரிக் காம்புகளாவது தவிர...



இலங்கை தேசத்தை பட்டினி ஆட்கொண்டிருந்த 1970-1977 களின் நடுப்பகுதியில் மலையகத் தொழிலாளர் குடும்பத்தில் தோன்றிய மயில்வாகனம் திலகராஜா ஆகிய 'திலகர்' இரு மொழிகளிலும் பல பள்ளிகளிலும் பாடசாலைக் கல்வியைக்கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகமானி சிறப்பு (B.Com Hon) பட்டத்தையும் இதழியல் கல்வி சிறப்பு டிப்ளோமாவையும் (JUIN AOKI (Japan) GOLD MEDAL FOR THE BEST PERFOMANCE AT THE DIPLOMA IN JOURNALISM 2002) பெற்றுள்ளார். தற்போது இலங்கை திறந்த பல்கலை கழகத்தில் (LLB) சட்டமானி கல்வியைத் தொடர்ந்து வருகிறார். ஆசிரியராக தொழில் தொடங்கிய இவர், முகாமைத்துவ உசாத்துணைவராக ( Management Consultant) பல நிறுவனங்களில் பணியாற்றுவதுடன் தொழில் ரீதியாக பல நாடுகளுக்கும் பயணித்து வருகிறார்.

எத்தொழில் செய்தபோதும் எந்நாடு சென்ற போதும் இவரோடு கூடவே பிறந்திருக்கும் சமூக பிரக்ஞை இவரை ஒரு சமூக செயற்பாட்டாளராகவும் மலையக கல்வி குறித்த அக்கறையாளராகவும் பத்தி எழுத்தாளராகவும் அரசியல் ஆய்வாளராகவும் செயற்பாட்டாளராகவும் ஆக்கிவிட்டிருக்கிறது.

கவிதை, நாடகம், பேச்சு, கட்டுரை, விவாதம், விமர்சனம் என விரிந்து செல்லும் இவரது படைப்பாற்றலின் முதல் கவிதை தொகுப்பே இது. தன் ஒவ்வொரு படைப்புக்குள்ளும் ஒரு வரலாற்றைப் பதிவு செய்வது இவரது படைப்பின் பலம். 'திலகர்' புதியவர் மட்டுமல்ல, புத்தாக்கம் (Innovation) செய்பவரும் கூட. இது ஒரு புத்தாக்கப் படைப்பு. இதனை படைக்கும் நாளில் இவருக்கு வயது முப்பத்து நான்கு.

பொ.சிங்கரட்ணம் M.A சிரேஸ்ட விரிவுரையாளர்
ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி, பத்தனை. இலங்கை

ISBN 978-955-1805-00-5

Bakya Publication